


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 193 24.02.2026 செவ்வாய்க்கிழமை

Chennai Volume: 01 Issue: 193 Tuesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(24–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–12
பிறை: வளர்பிறை
திதி
சப்தமி காலை 7.49 வரை
பிறகு அஷ்டமி மறுநாள்
விடியற்காலை 4.10 வரை
பிறகு நவமி
நட்சத்திரம்:
கார்த்திகை பிற்பகல் 3.47
வரை பிறகு ரோகிணி
யோகம்
சித்த/அமிர்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00–4.30 மணி
எமகண்டம்
காலை 9.00–10.30 மணி
சூலம் – வடக்கு
நல்ல நேரம் :
காலை 8–9 மணி.
மாலை 5–6 மணி

மேஷம் ............. மேன்மை
ரிஷபம் .................. நிம்மதி
மிதுனம் .................. வெற்றி
கடகம் .................. ஆசை
சிம்மம் .................. செலவு
கன்னி .................. சுகம்
துலாம் .................. நன்மை
விருச்சிகம் ........... அமைதி
தனுசு .................. ஆதரவு
மகரம் .................. வரவு
கும்பம் .................. சுபம்
மீனம் .................. முயற்சி

# நாடு முழுவதும் உடல் உறுப்பு தானம் அதிகரிப்பு

## பிரதமர் மோடி

**புது தில்லி,பிப்.24:**

நாடு முழுவதும் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. கேரள குழந்தை ஆலின் போல பலரும் உறுப்பு தானம் செய்து, ஏராளமான மக்களுக்கு 2-வது வாழ்க்கையை அளித்துள்ளனர். அவர்களது குடும்பத்தினரை இதயத்தின் ஆழத்தில் இருந்து வாழ்த்துகிறேன் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை 'மனதின் குரல்' (மன் கீ பாத்) வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்யப்படுகிறது. இதன்படி நேற்று ஒலிபரப்பான 131-வது 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: டெல்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு (ஏஐ) உச்சி மாநாட்டில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், சிஇஓக்கள், ஏஐ நிபுணர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஏஐ தொழில்நுட்பத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவது குறித்து மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. சர்வதேச அளவில் இந்த உச்சி மாநாடு மிகப்பெரிய திருப்பு முனையாக அமைந்துள்ளது.

டெல்லி மாநாட்டில் 2 அரங்குகள் உலகத் தலைவர்களின் கவனத்தை ஈர்த்தன. முதல் அரங்கு அமுல் நிறுவன அரங்கு ஆகும். விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பதில் ஏஐ பயன்பாடு குறித்து அங்கு தெளிவாக விளக்கப்பட்டிருந்தது. 2-வது அரங்கம், நமது கலாச்சாரத்துடன் தொடர்புடையது.

ஏஐ தொழில்நுட்ப உதவியோடு நமது பண்டைய நூல்கள், நமது தொன்மையான ஞானம், ஓலைச் சுவடிகளை எவ்வாறு பாதுகாத்து வருகிறோம் என்பது இந்த அரங்கில் விளக்கப்பட்டிருந்தது. ஏஐ மூலம் இந்தியாவின் பண்டைய நூல்கள், ஓலைச் சுவடிகளை எந்த மொழியிலும் மொழிபெயர்க்கும் வசதியும் செய்யப்பட்டிருந்தது.


இதன்மூலம் இந்தியாவின் தொன்மையை டிஜிட்டல் வடிவில் அறிந்து கொள்ள உலகத் தலைவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். மாநாட்டில், இந்தியா சார்பில் 3 ஏஐ மாடல்கள் அறிமுகம் செய்யப்பட்டன. மாநாட்டின் வெற்றிக்காக உழைத்த அனைவரையும் மனதார பாராட்டுகிறேன். டெல்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு மூலம் இந்தியாவின்தொழில்நுட்பத் திறன் உலகம் முழுவதும் பறைசாற்றப்பட்டுள்ளது.

தற்போது உலகக்கோப்பை டி20 போட்டிகளை பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதில் பல்வேறு நாடுகளின் அணிகள் பங்கேற்றுள்ளன. கனடா, அமெரிக்கா, ஓமன், ஐக்கிய அரபு அமீரகம் உட்பட பலநாடுகளின் அணிகளில் இந்திய வம்சாவளியினர் விளையாடி வருகின்றனர். அவர்களது பெயர், மொழியில் இந்தியாவின் மணம் வீசுகிறது. இந்திய வம்சாவளி மக்கள் எந்த நாட்டில் வசிக்கிறார்களோ, அந்த நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன்பு, கேரளாவை சேர்ந்த குழந்தை ஆலின் ஷெரின் ஆபிரகாமை நாம் இழந்துவிட்டோம். அந்த குழந்தையின் பெற்றோருக்கு ஏற்பட்டிருக்கும் வலி, துயரை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஆழ்ந்த துயரத்திலும் ஆலினின் தந்தை அருண் ஆபிரகாம், தாய் ஷெரின் ஆகியோர் குழந்தையின் உடல் உறுப்புகளை தானம் செய்துள்ளனர். அவர்களது பெருந்தன்மையைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. ஒருபுறம் மகளை இழந்த துக்கத்தில் வாடினாலும், மற்றவர்களுக்கு உதவும் நல்ல எண்ணம் அவர்களுக்குள் நிரம்பிஇருந்தது.

நாடு முழுவதும் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. இதன்மூலம் பலரும் பயனடைந்து வருகின்றனர். கேரளாவின் ஆலின்போல பலரும் உறுப்பு தானம் செய்து, ஏராளமான மக்களுக்கு 2-வது வாழ்க்கையை அளித்துள்ளனர். அவர்களது குடும்பத்தினரை இதயத்தின் ஆழத்தில் இருந்து வாழ்த்துகிறேன்.

நாடு முழுவதும் பொதுத் தேர்வுகள் நடந்து வருகின்றன. மாணவர்களே, உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். படித்ததை முழு மனதோடு எழுதுங்கள். படிப்பிலும், வாழ்விலும் நீங்கள் புதிய சிகரங்களைத் தொட வாழ்த்துகள்.



## கேரளாவின் கும்பமேளா: பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்



மனதின் குரல் வானொலி உரையில் பிரதமர் மோடி நேற்று கேரள மாநில கும்பமேளா பற்றி பெருமையாகக் குறிப்பிட்டார்.

இதுகுறித்து பிரதமர் கூறியதாவது: கேரளத்தின் திருச்சூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரே ஒரு வயலில் மட்டும் 570 வகையான நெற்பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இது விதைகளின் மரபைப் பாதுகாக்கும் பேரியக்கம் ஆகும். உலகின் மிகப்பெரிய அரிசி உற்பத்தியாளராக இந்தியா உருவெடுத்திருக்கிறது.

15 கோடி டன்களுக்கும் மேலாக அரிசி உற்பத்தி செய்வது சாதாரண சாதனை கிடையாது. கேரளாவின் திருநாவாய் கிராமத்தில் பொன்னானி நதிக்கரையில் பழமையான பாரம்பரியம் பின்பற்றப்படுகிறது, அதுதான் மாமாங்கம். இதை மகாமக மஹோத்சவம் அல்லது கேரள கும்பமேளா என்கின்றனர்.

எந்த அறிவிப்பும் இல்லாமல் கேரளாவின் கும்பமேளா அண்மையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டு உள்ளது. இந்த விழாவுக்காக விளம்பரம் செய்யப்படவில்லை. வாய்மொழியாகவே தகவல்கள் பரிமாறப்பட்டன.

இதன் மூலம் பெருந்திரளான மக்கள் திருநாவாய் கிராமத்தில் கூடினர்.

வடக்கு முதல் தெற்கு வரையில் ஓடும் நதிகள் வேறாக இருக்கலாம், கரைகள் வேறாக இருக்கலாம், ஆனால் நம்பிக்கை ஒன்றுதான், இதுதான் இந்தியா. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

## மாநில தேர்தல் ஆணையங்களுடன் ஒருங்கிணைப்பை வலுப்படுத்த தில்லியில் தேசிய மாநாடு!

**புது தில்லி,பிப்.24:**

தேர்தல் ஆணைய அதிகாரிகள் கூறியதாவது: இந்த மாநாடு இந்திய தலைமை தோதல் ஆணையா ஞானேஷ் குமாா தலைமையில் நடைபெறும். தோ்தல் ஆணையாகள் சுக்பீா சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோா் மாநாட்டில் கலந்து கொள்வா.

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த மாநில தோ்தல் ஆணையாகள் தங்களின் தொழில்நுட்பம் மற்றும் சட்டக் குழுக்களுடன் மாநாட்டில் நடக்கும் விவாதங்களில் பங்கேற்பா. 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாநில தலைமைத் தோ்தல் அலுவலா்களும் (சிஇஓ) மாநாட்டில் பங்கேற்பா.

நாள் முழுவதும் நடைபெறும்மாநாட்டின்போது தொழில்நுட்பம், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளா பட்டியல்களைப் பகிா்ந்து கொள்வது, தோ்தல் செயல்முறைகள் மற்றும் தோ்தல் பொருள்களை கையாளும் முறைகள் போன்றவை குறித்து விவாதிக்கப்படும் என்றாா.

ஆக்கபூா்வமான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், தோ்தல் நிா்வாகத்தில் கூட்டுறவு கூட்டாட்சியை வலுப்படுத்துவதற்கும் இந்த சிறப்பு வட்டமேஜை மாநாடு ஒரு தளமாக அமையும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

## ராமேசுவரம் மீனவர்கள் 12 பேர் கைது: இலங்கை கடற்படை தொடர் அட்டூழியம்

**சென்னை,பிப்.24:**

எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும், மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.

இதற்கிடையில், ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் துறைமுகத்திலிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். இந்த மீனவர்கள் அனைவரும் நடுக்கடலில் மீன்பிடித்தனர்.

இந்த நிலையில், டேவிட் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் சென்ற மீனவர்கள் தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது ரோந்து கப்பலில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர், விசைப்படகை சுற்றி வளைத்தனர்.

அதில் இருந்த 12 மீனவர்களை எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி சிறைபிடித்து கைது செய்ததுடன், படகையும் பறிமுதல் செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மீனவர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

12 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தது அவர்களது குடும்பத்தினரையும், மீனவ மக்களையும் மிகுந்த சோகம் அடையச் செய்துள்ளது. மேலும் அவர்களை விடுவிக்க வேண்டும் என மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்து உள்ளன.

# எனக்கும் முதல்வர் ஸ்டாலினுக்கும் நடக்கும் போர்": விஜய் பேச்சு


**வேலூர்,பிப்.24:**

"தற்போது நடக்க இருக்கும் சட்டப்பேரவை தேர்தல், தமிழ்நாட்டு மக்களுக்கும் ஊழல், லஞ்சம், நிர்வாகத்தை சரியாக செய்யாத உங்கள் ஆட்சிக்கும் இடையே நடக்கும் போர். அதாவது, விஜய்க்கும் - ஸ்டாலின் சாருக்கும் இடையே நடைபெறும் போர்" என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தவெக தலைவர் விஜய்யின் நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் வேலூர் மாவட்டம், அகரம்சேரியில் திங்கள்கிழமை நடைபெற்றது. அந்த சந்திப்புக்குப் பின்னர் தவெக நிர்வாகிகளை உறுதிமொழி ஏற்க வைத்தார் விஜய். அதில், "எங்களை யாரும் விலைக்கு வாங்க முடியாது. யாரை நம்பியும் ஏமாற மாட்டோம். எங்கள் வார்த்தையில் இருந்து மாற மாட்டோம்" என தெரிவித்தார்.

பின்னர் பேசிய அவர், "மக்களை நேசிக்கிற ஒரு சரியான தலைமை இல்லாததால், முதல்வர் ஸ்டாலின் கொடுத்த பொய்யான வாக்குறுதிகளை நம்பி மக்கள் ஏமாந்தனர். இன்று மக்களை நேசிக்கும் இயக்கமாக தவெக வந்துள்ளது.

மக்களை உங்கள்



ஊரில் வந்து பார்க்கவே விருப்பம். ஆனால் நம்மை சுற்றி நடக்கும் பல்வேறு சூழ்ச்சிகளால் மக்களை சந்திக்க முடியவில்லை. நமது ஆட்சி அமைந்ததும், ஒவ்வொரு கிராமத்துக்கும் நேரடியாக வந்து உங்களை சந்திக்கிறேன்.

தற்போது நடக்க இருக்கும் சட்டப்பேரவை தேர்தல், தமிழ்நாட்டு மக்களுக்கும் ஊழல், லஞ்சம், நிர்வாகத்தை சரியாக செய்யாத உங்கள் ஆட்சிக்கும் நடக்கும் போர். விஜய்க்கும் ஸ்டாலின் சாருக்கும் இடையே நடைபெறும் போர்தான் இந்த தேர்தல். தீய சக்தி திமுக, தூய சக்தி தவெகவுக்கு இடையேயான போர்.

தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும், தமிழ்நாட்டுக்கும் என். டி.ஏ.க்குவுமான தேர்தல் என முதல்வர் ஸ்டாலின் பேசி வருகிறார். இப்போது நடக்கவிருப்பது நாடாளுமன்றத் தேர்தலா, பிரதமர் பதவிக்கான தேர்தலா, முதல்வர் சார்?. எந்த தேர்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என நம் மக்களுக்கு தெளிவாகத் தெரியும். தவெகவுக்கு எதிரி திமுக தான்.

தமிழ்நாடுதான் விஜய்; விஜய் தான் தமிழ்நாடு. விஜய்யும் மக்களும் வேறு வேறு இல்லை, விஜய்யும் மக்களும் உடலும் உயிரும் போல. மக்களை நேசிக்கிற விஜய் வேண்டுமா? மக்கள் விரோத ஆட்சி செய்கிற ஸ்டாலின் சார் வேண்டுமா?

எனக்கு ஒரு புதிய நண்பர் கிடைத்துள்ளார். அது முதல்வர் ஸ்டாலின் தான். ஒரு செய்தியாளர் சந்திப்பில், 'எனக்கு யாரும் எதிரி கிடையாது' என முதல்வர் கூறியிருந்தார். அப்படியென்றால், கரூர் விஷயத்தில் என் மேல் ஏன் பழி சுமத்தினீர்கள்.

உங்கள் உண்மையான நண்பர் லஞ்சம் , ஊழல் தான். அரசியலுக்கு வருவதற்கு முன்பு உங்கள் சொத்து மதிப்பு என்ன? அரசியலுக்கு வந்த பிறகு உங்கள் சொத்து மதிப்பு என்ன? தமிழகத்துக்கு தேவையில்லாத ஆட்சி திமுக. அறிவாலயம் பக்கம் யாரவது நடந்து போனால் கூட, ஏன் நிழலுக்கு ஒதுங்கினால் கூட கூட்டணிக்கு சேர்த்துக் கொள்கிறார்கள். திமுக கூட்டணிக்கு நான் 'கல்லாப்பெட்டி கூட்டணி' என பெயர் வைத்துள்ளேன்.

தமிழகம் சூப்பர் ஸ்டார் மாநிலம்தான், அது காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர் காலத்தில் தான். இன்றைக்கு சூப்பர் ஸ்டாண்ட் - அப் காமெடிக்காரர் நடத்தும் மாநிலமாக மாறிவிட்டது. தீய சக்திக்கு முடிவு கட்ட இந்தத் தேர்தலை பயன்படுத்துங்கள். விசிலுக்கு ஓட்டு போட்டு தீய சக்திக்கு முடிவு கட்டுங்கள். இது விசில் புரட்சி தேர்தல். இவ்வாறு விஜய் பேசினார்.

## 73 ஆண்டு கால வரலாற்றில் மிகவும் குறைவு: திமுக ஆட்சியில் சட்டசபை கூடிய நாட்கள் 161

**சென்னை,பிப்.24:**

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1952-ம் ஆண்டு முதல் ஜனநாயக முறைப்படி சட்டசபை தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. இதில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களே அந்தந்த மாநில சட்டசபைகளில் மக்களுக்காக குரல் கொடுக்க முடியும்.

கடந்த 2021-ம் ஆண்டு சட்டசபை தேர்தலுக்கு திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், ஆண்டுக்கு 100 நாட்களுக்கு குறையாமல் சட்டசபை கூட்டம் நடத்தப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், 2021-ம் ஆண்டு மே முதல் 2026-ம் ஆண்டு பிப்ரவரி வரை 5 ஆண்டுகளில் 161 நாட்கள் மட்டுமே சட்டசபை கூட்டம் நடைபெற்றுள்ளது.

இதுவரை, 73 ஆண்டு கால சட்டசபை வரலாற்றில் குறைந்த நாட்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது இந்த முறைதான்.

இதற்கு முன்பு1989-1991-ம் ஆண்டு காலத்தில் 104 நாட்களே சட்டசபை கூட்டம் நடைபெற்றாலும், அப்போதைய ஆட்சி காலம் 3 ஆண்டுகளுக்கும் குறைவுதான்.



## ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவில் பூச்சொரிதல் விழா



புதுக்கோட்டை திருவப்பூர் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவில் பூச்சொரிதல் விழாவை முன்னிட்டு நேற்று காலை சிறப்பு பூஜை நடைபெற்றது.



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வடசென்னை மாவட்டம் முன்னாள் தலைவர் திரு குப்புசாமி வழக்கறிஞர் மரியாதை நிமிர்த்தமாக திரு பாலகிருஷ்ணன் வடசென்னை மாவட்ட கிழக்கு துணைத் தலைவர் சால்வை அணிவித்தார்

## பா.ஜ.க. தலைமை தேர்தல் அலுவலகம் 26-ந்தேதி திறப்பு



**சென்னை, பிப்.24:**
அ.தி.மு.க. தலைமையில் சட்டமன்ற தேர்தலை சந்திக்கும் பா.ஜ.க. தேர்தல் முன்னேற்பாடுகளை தீவிரமாக செய்து வருகிறது.

பாரதிய ஜனதா கட்சியின் தலைமைத் தேர்தல் அலுவலகம் அமைந்தகரையில் உள்ள அய்யாவு மகாலில் அமைகிறது. இதற்கான வேலைகள் இரவு பகலாக நடந்து வருகிறது. இந்த அலுவலகத்தில் பிரசாரங்களை ஒருங்கிணைப்பது, விளம்பரத் துறை, பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது, சமூக ஊடகப் பிரிவு, தேர்தல் அறிக்கை தயாரிப்பு, சட்ட உதவி, தலைவர்கள் சுற்றுப்பயண ஏற்பாடு, அகில இந்திய தலைவர்கள் வருகை, தங்க வைத்தல், பிரசாரத்துக்கு தேவையான பொருட்களை அனுப்பி வைத்தல், வாகனங்கள் ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட 30 துறைகள் அமைக்கப்படுகிறது.

இதுதவிர கூட்ட அரங்கம், தலைவர் அறை, முக்கிய தலைவர்கள் கலந்துரையாடும் அறை உள்பட பல்வேறு வசதிகள் செய்யப்படுகிறது. ஒவ்வொரு துறை அலுவலகத்திலும் இணைய வசதியுடன் கம்ப்யூட்டர் வசதிகள், முழுநேரமும் ஊழியர்கள் இடம் பெறுவார்கள்.

இந்த பணிகள் அனைத்தும் வருகிற 25-ந்தேதிக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளார்கள். 26-ந்தேதி (வியாழன்) இந்த அலுவலகத்தை மத்திய மந்திரி பியூஷ்கோயல் திறந்து வைக்கிறார். அதன் பிறகு கட்சி அலுவலகமும் தற்காலிகமாக இங்கு செயல்படும்.

## மாமல்லபுரம் கலங்கரை விளக்கம் முன் அறிவிப்பு இல்லாமல் 'திடீர்' மூடல்



**சென்னை, பிப்.24:**
அ.தி.மு.க. தலைமையில் சட்டமன்ற தேர்தலை சந்திக்கும் பா.ஜ.க. தேர்தல் முன்னேற்பாடுகளை தீவிரமாக செய்து வருகிறது.

பாரதிய ஜனதா கட்சியின் தலைமைத் தேர்தல் அலுவலகம் அமைந்தகரையில் உள்ள அய்யாவு மகாலில் அமைகிறது. இதற்கான வேலைகள் இரவு பகலாக நடந்து வருகிறது. இந்த அலுவலகத்தில் பிரசாரங்களை ஒருங்கிணைப்பது, விளம்பரத் துறை, பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது, சமூக ஊடகப் பிரிவு, தேர்தல் அறிக்கை தயாரிப்பு, சட்ட உதவி, தலைவர்கள் சுற்றுப்பயண ஏற்பாடு, அகில இந்திய தலைவர்கள் வருகை, தங்க வைத்தல், பிரசாரத்துக்கு தேவையான பொருட்களை அனுப்பி வைத்தல், வாகனங்கள் ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட 30 துறைகள் அமைக்கப்படுகிறது.


இதுதவிர கூட்ட அரங்கம், தலைவர் அறை, முக்கிய தலைவர்கள் கலந்துரையாடும் அறை உள்பட பல்வேறு வசதிகள் செய்யப்படுகிறது. ஒவ்வொரு துறை அலுவலகத்திலும் இணைய வசதியுடன் கம்ப்யூட்டர் வசதிகள், முழுநேரமும் ஊழியர்கள் இடம் பெறுவார்கள்.

இந்த பணிகள் அனைத்தும் வருகிற 25-ந்தேதிக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளார்கள். 26-ந்தேதி (வியாழன்) இந்த அலுவலகத்தை மத்திய மந்திரி பியூஷ்கோயல் திறந்து வைக்கிறார். அதன் பிறகு கட்சி அலுவலகமும் தற்காலிகமாக இங்கு செயல்படும்.

## ஸ்ரீ அங்காள பரமேஸ்வரிஅம்மன் தெப்பல் உற்சவம்







**திருவண்ணாமலை, பிப்.24:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீஆஞ்சநேயர் குளக்கரையில் அமைந்திருக்கும் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் தெப்பல் திருவிழா உற்சவமூர்த்தியை அலங்கரித்து வண்ண மலர் மாலைகளால், மின்விளக்குகளால் அலங்கரித்து, வான வேடிக்கையுடன், மேளதாளத்துடன் மூன்று முறை குளத்தில் தெப்பல் சுற்றி வந்தன . வேத மந்திரங்கள் ஒலிக்க பாட்டுகள் பாடி மகாதீபாரதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் தெப்பல் திருவிழாவில் கலந்துகொண்டு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரியை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 'வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலினின் மகளிர் படை'



**திருவண்ணாமலை, பிப்.24:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி பகுதியில் பாகம் எண் 168 -ல்' வெல்லும் தமிழ் பெண்கள் 2026 ஸ்டாலினின் மகளிர் படை' வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரச்சாரத்தினை மாண்புமிகு துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் ஆரஞ்சி ஆறுமுகம் அவர்கள், நகரச் செயலாளர் C.K.அன்பு அவர்கள், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி தலைவர் திரு சரவணன் அவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் தேர்தல் பிரச்சாரத்தில் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 255 ஆவது வாரமாக மரக்கன்றுகள் நடும் பணி



**மதுரை, பிப்.24:**
யானைமலை கிரீன் பவுண்டேஷன் சார்பில் 22 2.2026 ஞாயிற்றுக் கிழமையன்று 255 ஆவது வாரமாக மரக்கன்றுகள் நடும் பணி யா. ஒத்தக்கடை இராஜகம்பீரம் காலனிப் பகுதியில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் தென்னவன் தலைமை வகித்தார்.


தியாகராாசர் நன்முறை மேனிலைப் பள்ளியின் தமிழாசிரியர் வி கார்த்திக்-தமிழ் இலக்கியா இணையரின் திருமண நாள் விழாவைக் கொண்டாடும் வகையில் மரம் நடப்பட்டது.

சிறப்பு அழைப்பாளர்களாக விஜய் தொலைக்காட்சி நீயா நானா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நட்பைப் பற்றிப் பேசிப் பிரபலமான தியாகராாசர் நன்முறை மேனிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் திருமதி பத்மப்ரியா, சௌராஷ்ட்ரா ஆண்கள் மேனிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் திருமதி. மதிப்பிரியா ஆகியோர் கலந்து கொண்டு மரத்தை நட்டனர். சிறப்பு அழைப்பாளர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

யானைமலை கிரீன் பவுண்டேஷன் உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர்.

**மதுரை O. K. சிவா**

## கொடைக்கானல் மலை கிராமங்களில் சுற்றுலா பயணிகளை கவர்ந்த சங்கு வடிவிலான பூக்கள்



**பெரும்பாறை, பிப்.24:**
மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். கொடைக்கானல் மலைப்பகுதியில் ஒவ்வொரு காலநிலைக்கு ஏற்ப மரம், செடிகளில் பல்வேறு வண்ணப்பூக்கள் பூத்து கவர்ந்திழுப்பது வழக்கம். அதன்படி, தற்போது கொடைக்கானல் நகர்ப்பகுதி, மலைப்பாதைகள் மற்றும் கிராமங்களில் சங்கு பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன.

குறிப்பாக கொடைக்கானல் கீழ்மலை கிராமங்களான பெரும்பாறை. தாண்டிக்குடி, பண்ணைக்காடு, மங்களம் கொம்பு, புல்லாவெளி, கே.சி. பட்டி உள்ளிட்ட பகுதிகளில் காபி, வாழை, மிளகு போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் தோட்டங்களுக்குள் யாரும் செல்லாமல் இருக்க வேலிக்காக சங்கு பூச்செடிகளை விவசாயிகள் நடவு செய்துள்ளனர். அதேபோல் மலைப்பாதைகளில் சாலையோரங்களில் உள்ள தோட்டங்களிலும் வேலிக்காக சங்கு பூச்செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது அந்தபூச்செடிகளில் இளஞ்சிவப்பு, மஞ்சள், வெள்ளை நிறங்களில் சங்கு பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன. இவை சாலையோரங்களில் மின் விளக்குகளை தோரணங்களாக கட்டிவிடப்பட்டது போன்று சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளன.இதனால் அவற்றை சுற்றுலா பயணிகள் பார்த்து ரசிப்பதுடன், தங்களது கேமரா, செல்போனில் புகைப்படம் எடுத்து செல்கின்றனர்.

## மயக்க மாத்திரை கொடுத்து மகளை கள்ளக்காதலனுக்கு விருந்தாக்கிய தாய் கைது



**போரூர், பிப்.24:**
சென்னை சாலிகிராமம் பகுதியை சேர்ந்த 20 வயது இளம்பெண் கல்லூரியில் படித்து வருகிறார். இவரது தாய்க்கும் தட்சிணாமூர்த்தி என்பவருக்கும் கள்ளத் தொடர்பு ஏற்பட்டது. இதனால் மாணவி தனது தாயுடன் பேசுவதை தவிர்த்து வந்தார்.

இந்த நிலையில் மகள் என்றும் பாராமல் அவருக்கு தாயே தூக்கமாத்திரை கொடுத்து தனது கள்ளக்காதலன் தட்சிணாமூர்த்திக்கு விருந்தாக்கினார். இதில் கர்ப்பம் அடைந்த மாணவி தாயின் பிடியில் இருந்து தப்பி திருவண்ணாமலையில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்று தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து கூறினார்.

இதுகுறித்து வடபழனி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதில் தனது வாழ்க்கையை சீரழித்த கொடூர தாய் மற்றும் அவரது கள்ளக்காதலன் தட்சிணாமூர்த்தி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிஇருந்தார்.

இதையடுத்து பெற்ற மகளையே தனது கள்ளக்காதலனுக்கு இரையாக்கிய தாயை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவரை சிறையில் அடைத்தனர். மேலும் தலைமறைவான தட்சிணாமூர்த்தி மீது கற்பழிப்பு வழக்கு பதிவு செய்து போலீசார் தேடி வருகின்றனர்.




## 'வாக்கரசியலுக்காக வழக்குக்கூட போடாமல் விஜய்யை காப்பாற்றியது தி.மு.க' - இடும்பாவனம் கார்த்திக் விளாசல்



**சென்னை, பிப்.24:**
கடந்தாண்டு செப்டம்பரில் கரூரில் நடைபெற்ற தவெக மாநாடு கூட்டநெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதில் ஒரு ஒன்றரை வயது குழந்தையும் அடங்கும். விஜய்யின் வருகை பல மணி நேரம் தாமதமானதாலும், அவரைக் காண மக்கள் திடீரென முண்டியடித்ததாலும் இந்த நெரிசல் ஏற்பட்டது என்றும், மின்வெட்டு மற்றும் போதிய தண்ணீர் வசதி இல்லாததும் உயிரிழப்புக்கு காரணங்களாகச் சொல்லப்பட்டன.

விஜய் தரப்பில் பலியானோர் குடும்பங்களுக்கு தலா ரூ.20 லட்சம் மற்றும் காயமடைந்தவர்களுக்கு ரூ.2 லட்சம் நிதியுதவி அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு ரூ.2 லட்சம் அறிவித்தது. சிபிஐ விசாரணையும் நடைபெற்று வருகிறது. இந்த விவகாரத்தில் தற்போதுவரை ஆளும்கட்சியான திமுகவை மட்டுமே விஜய் குறைக்கூறி வருகிறார். இந்நிலையில் இன்றும் முதலமைச்சர் தன்மீது பழிபோட்டதாக வேலூரில் பேசினார். இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நாதகவின் செய்தித் தொடர்பாளர் இடும்பாவனம் கார்த்திக் ஒரு பதிவிட்டுள்ளார். அதில், "தெலங்கானாவில் அல்லு அர்ஜுனைக் கைதுசெய்தது போல, கரூர் பேரவலத்திற்குக் காரணமான விஜய்யைக் கைதுசெய்திருக்க வேண்டும். ஆனால், வழக்குக்கூட போடாது முழுமையாகக் காப்பாற்றிவிட்டது கேடுகெட்ட திமுக.

'விஜய்யைக் கைதுசெய்து, அது திமுகவுக்கு வாக்கரசியலில் எதிர்மறையாகத் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டால் என்ன செய்வது?' எனும் இலாப, நட்டக் கணக்குப் போட்டு, எந்த நடவடிக்கையும் எடுக்காது விட்டது திமுக. அவ்வளவு அக்கறை மக்கள் மீது? வெட்கக்கேடு!

41 பேரின் பிணங்களின் மேல் கூட்டணி அமைக்க அதிமுகவும், பாஜகவும் முயற்சித்ததென்றால், தேர்தல் ஆதாயத்தை மனதிற்கொண்டு நடவடிக்கை எடுக்க மறுத்தது சந்தர்ப்பவாத திமுக. 41 பேரின் மரணத்தைவிட அரசியல் இலாபம்தான் முக்கியமெனக் கருதிய ஸ்டாலின் அரசின் அயோக்கியத்தனம் அது!

இன்றைக்கு, "கரூர் விஷயத்தில் என் மீது பழிபோட்டார்கள்" என்கிறார் விஜய். அப்படியென்றால், கரூர் பேரவலத்தில் விஜய்க்கு எந்தப் பொறுப்பும் இல்லையா? எந்தவிதத்திலும் அவர் காரணமில்லையா? எப்படி இப்படியெல்லாம் பேச விஜய்க்கு மனம் வருகிறது?இப்போதுவரை கரூர் மரணங்கள் விஜய்க்கு எந்த உறுத்தலையும், குற்ற உணர்ச்சியையும், வலியையும் ஏற்படுத்தவில்லை என்பதற்கு அவரது இந்தப் பேச்சே உதாரணம். விஜய் என்றைக்கும் திருந்தப் போவதுமில்லை; வருந்தப் போவதுமில்லை. தன்னிடமிருக்கும் பணத்தையும், திரைக்கவர்ச்சியையும் முதலீடாகக் கொண்டு மக்களை ஆண்டுவிடத் துடிக்கும் விஜய் மிக மோசமானக் காரியக்கிறுக்கன். கடந்தக் கூட்டத்தில் இறந்தவரின் பெயரைச் சொல்லி இரங்கல்கூட தெரிவிக்காத விஜய்யின் தலைக்கனமும், ஆணவமும் மிக மிக ஆபத்தானது." எனக் குறிப்பிட்டுள்ளார்.


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


Vilambaram
GET... SET..... SHOOT
YOUR SALES WITH SOCIAL MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY
For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.



# கவிதை அரங்கம்!



தூரம் வலியை
கொடுத்தாலும் சுகமே
நினைவுகள்
உன்னை சுற்றியே
சுழன்று கொண்டிருப்பதால்

நினைவு கடலில்
நீந்துகின்றேன்
கரை சேர்த்திட
வருவாயென...!

நம்மை
நனைத்த மழைதுளி
உலர்ந்தபோதும்
நாம் இணைந்த
நினைவுதுளி
இன்னும் ஈரமாகவே
மனதில்...!

என்னால்
நீ அனுபவித்த
காயங்களையெல்லாம்
ஆற்றிடவேண்டும்
அன்பில்...!

## வாழ்க்கை தத்துவம்...



கடந்தது ஒரு பாடம்
நிகழ்காலம் ஒரு வாய்ப்பு
எதிர்காலம் ஒரு கனவு

வாழ்க்கை சில நேரம் சோதனை
சில நேரம் பாடம்
ஆனால் எப்போதும் ஒரு பயணம்

ஒவ்வொரு விழுதலும் ஒரு பாடம்
ஒவ்வொரு எழுச்சியும் ஒரு பெருமை

வாழ்க்கை அழகாக மாறுவது
நாம் சின்ன விஷயங்களில்
மகிழ்ந்தால் தான்

நிம்மதி தேடுவது அல்ல
அதை உருவாக்குவது தான் வாழ்க்கை

நிம்மதியாக வாழ்வது
ஒரு கலையாகும்
அதற்குக் கட்டணம் "மன அமைதி"

# முடிவல்லஆரம்பம்

பரபரப்பான காலை நேரம். சாலையோரம் " தோசை கடை " தள்ளு வண்டியில், சூடாக இட்லி சட்னி சாம்பார் வடை தோசை என்று குறைந்த விலையில் வியாபாரம் சூடு பிடிக்கிறது.

பிளஸ் 2 பரீட்சைக்காக ஸ்டடி லீவு என்பதால், அன்றைக்கு கொஞ்சம் நேரம் அம்மாவுக்கு ஒத்தாசையாக கடைவேலையில் மும்முரமாக இருந்தாள் ஐஸ்வர்யா...10 மணிக்கு டியூஷன் போகணும்.

ஒரு வாரமாக அப்பாவுக்கு உடல்நலம் சரியில்லை.அதனால் கடையை அம்மாவும் பெண்ணுமாக பார்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயம். வாழ்வாதாரத்தை விட முடியுமா?

" என்ன வசந்தா.. கடையில இது யாரு புதுசா உன் பொண்ணா?'" என்ற கனத்த குரலை கேட்டு நிமிர்கிறாள் ஐஸ்வர்யா. வாட்ட சாட்டமான உருவம் கனத்த மீசை. ஒட்ட வெட்டிய கிராப்பு. போலீஸ் யூனிபார்ம்.

" ஆமாங்க அண்ணே என் பொண்ணுதான்." என்றவள் பெண்ணை பார்த்து. ஏ புள்ள.. ஐயாக்கு வணக்கம் சொல்லு...

என்ன சாப்பிடுறீங்க... என்று இட்லி, சட்னி, சூடா தோசை வடை.. எல்லாம் தாராளமாக தட்டில் வைத்து நீட்டினாள். நன்றாக சாப்பிட்டுவிட்டு 10 இட்லி நாலு வடை நாலு தோசை பார்சலும் கட்டிக் கொண்டார் ஏட்டையா. சாப்பிட்டதும் பார்சல் சேர்த்து 200 ரூபாய் என்று கணக்கு பார்த்து வைத்திருந்த ஐஸ்வர்யா.. அவர் கிளம்பி விட்டதை பார்த்து தயங்கி நின்றாள்...

மறுநாள் சட்னி சாம்பார் தீர்ந்துவிட, வீட்டுக்கு போய் எடுத்து வரலாம் என்று அம்மா நகர்ந்து விட, டிப் டாப் ஆக வந்திருந்தார் ஏட்டையா.

நேற்றைய கதை தான் இன்றைக்கும். மூக்கு முட்ட சாப்பிட்டுவிட்டு ஏப்பமிட்டு நகர்ந்தவரிடம், சார் என்று துணிந்து குரல் கொடுத்தாள். ஐஸ்வர்யா.

" நேத்து இன்னிக்கி சாப்பிட்டது, பார்சல் எல்லாம் சேர்த்து 350 ரூபாய் ஆச்சுங்க."..

" ஓ.. கணக்கெல்லாம் நல்லா போடுவியா " என்றார் நக்கலாக

" இதெல்லாம் ஒரு கணக்கா நான் பிளஸ் டூ படிக்கிறேன் சார் என்றாள் ஐஸ்வர்யா சிரித்தபடி

சுற்றி கடையில் இருந்த கூட்டம் கலகல என்று சிரித்து விட முகம் சிவந்துவிட்டது ஏட்டையாவுக்கு... ஏ பொண்ணு என்ன கிண்டலா சின்ன பிள்ளையாச்சுன்னு பாக்குறேன்.. டிராபிக் இடைஞ்சலா கடையை போட்டுக்கிட்டு இருக்கீங்க தள்ளுவண்டிய ஒடச்சு ஓரம் போட்டுவிடுவேன்.. காசா கேட்கிற காசு... என்று சத்தமிட அம்மா அதற்குள் ஓடி வந்து விட்டாள்.

தணிந்த குரலில் அவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு, சுருக்குப்பையிலிருந்து ஏதோ பணத்தை எடுத்து அவர் கையில் திணித்தாள். அதைப் பார்த்து திடுக்கிட்டு விட்டாள் ஐஸ்வர்யா.

வீட்டிற்கு வந்து அம்மாவிற்கும் பெண்ணிற்கும் வாக்குவாதம். அவரே நமக்கு காசு கொடுக்கணும் நீ எதுக்கு அவருக்கு காசு தந்த என்று.

உனக்கு இதெல்லாம் புரியாது நீ சின்ன புள்ள அமைதியா இரு.. என் பொழப்பை கெடுக்காத.. காசு கொடுக்கலைன்னா நம்ம ரோட்டோரம் கடை போட முடியாது தூக்கி கடாசிடுவான்... என்றாள் அம்மா கோபமும் அழுகையுமாக..

சட்டம், சட்டம் தான்... ரோட்டோரம் கடை போடக்கூடாதுன்னா.... இவருக்கு காசு கொடுத்து அது சரியா போய்டுமா.. சின்னப் பெண் வாதிடுகிறாள்..

உன்கிட்ட வாதம் பண்ண எனக்கு நேரமில்லை, நீ போய் படிக்கிற வழியை பாரு நான் பாத்துக்குறேன் கடையை என்று போய் விட்டாள் அம்மா.

ஒரு வாரம் சென்றது வேறொரு புது போலீஸ் வந்தார். மாமூல் பத்த வில்லை என்று தள்ளுவண்டி கடையை தள்ளிக் கடாசி விட்டார். கேள்விப்பட்ட ஐஸ்வர்யாவுக்கு அழுகையும் ஆத்திரமும் போட்டி போட்டது.

மறுநாள் கடையைக் காணாமல் வாடிக்கையாளர்கள் தேட ஆரம்பித்து விட்டார்கள். அதற்குள் ஐஸ்வர்யாவுக்கும் பரிட்சை முடிந்து விட்டது. அவளுக்கு ஒரு நல்ல யோசனை கிடைத்தது. அவர்களுக்கு ஓட்டு வீடு என்றாலும் முன்னாடி கொஞ்சம் இடம் உண்டு. தள்ளுவண்டியை தங்கள் வீட்டு வாசலில் உள் புறமாக கொண்டு நிறுத்திக் கொண்டாள்.. சின்ன சின்ன அட்டைகளில்" தோசை கடை இடமாற்றம் "என்று போன் நம்பரோடு எழுதி வாடிக்கையாளர்கள் கண்களில் படுகிற மாதிரி சாலையோரங்களில் தொங்க விட்டாள்.

வழக்கம்போல் அம்மா துணிந்து இட்லி சட்னி சாம்பார் ரெடி செய்ய...ரெண்டாவது நாள். போன் மேல் போன் வர...வாடிக்கையாளர்கள் ஒவ்வொருத்தராக வர.... அந்த சின்ன வீட்டுக்குள்ளேயே வியாபாரம் சூடு பிடிக்க ஆரம்பித்தது..

ஐஸ்வர்யாவிற்கும் அம்மாவிற்கும் புரிந்தது. இது முடிவல்ல.... புது ஆரம்பம் என்று....(! நேர்மையாய்) வாழ நினைத்தால் வாழலாம் என்றும்!

**மீனா சேகர்**

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



“இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்”

“அவ்வளவு பிசி ஓர்க்கா?”

“இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை”



# தினம் ஒரு சமையல்



## சௌசௌ தோல் துவையல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சௌசௌ தோல் | - 1கப் |
| தேங்காய் துண்டுகள் | - 2 டேபிள் ஸ்பூன் |
| புளி கொட்டை | - பாக்களவு |
| உப்பு | - ருசிக்கு |

வதக்க:-

| | |
|---|---|
| உ.பருப்பு | - 2 ஸ்பூன் |
| க.பருப்பு | - 2 ஸ்பூன் |
| ப.மிளகாய் | - 2 |
| காஷ்மீரி | - மிளகாய் 6 |
| சௌசௌ தோல், தேங்காய், மிளகாய், புளி | |
| ந.எண்ணெய் | - 2 ஸ்பூன் |

தாளிக்க:-

| | |
|---|---|
| கடுகு | - 1/2 டீ ஸ்பூன் |
| உ.பருப்பு | - 3/4 டீ ஸ்பூன் |
| பெருங்காயத்தூள் | - 1 டீ ஸ்பூன் |
| ந.எண்ணெய் | - 3/4 டீ ஸ்பூன் |
| தண்ணீர் | - 2 ஸ்பூன் |

செய்முறை:



தேவையான பொருட்களை தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

சௌசௌ தோலை சீவி, சிறியதாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காயை துண்டுகளாக நறுக்கவும்.

அடுப்பை மிதமான தீயில் வைத்து, கடாயில், 2 ஸ்பூன் ந.எண்ணெய் விட்டு சூடானதும், க.பருப்பு, உ.பருப்பு, பல.மிளகாய், காஷ்மீரி மிளகாய், தேங்காய், புளி ஆகியவற்றை வறுக்கவும்.

பிறகு சௌசௌ தோலை சேர்த்து நன்கு வதக்கினதும், அடுப்பை நிறுத்தி விட்டு ஆறவிடவும்.

ஆறினதும், மிக்ஸி ஜாரில் போட்டு, உப்பு சேர்த்து, அரைக்கவும்.

பின், பருப்பு, 2 ஸ்பூன் தணாணீர் சேர்த்து, கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும்.

அரைத்ததை. பௌலில் எடுக்கவும்.

அடுப்பை சிறு தீயில் வைத்து, கடாயில், 1/2 டீ ஸ்பூன் ந.எண்ணெய் விட்டு சூடானதும், கடுகு, உ.பருப்பு, பெருங்காயத்தூள், சேர்த்து, தாளித்து பௌலில் சேர்க்கவும்.

இப்போது, சுவையான, சுலபமான,*ஹெல்தி சௌசௌ தோல் துவையல்*தயார்.இது, சூடான சாதத்தில் நெய், ந.எண்ணெய் விட்டு சாப்பிட்டால், மிகவும் ஆப்ட்டாக இருக்கும்.

## மிளகாய் பயன்கள்



பச்சை மிளகாயில் காரம் மட்டுமல்ல; பயன் தரும் நன்மைகளும் உண்டு!

சமையலில் உபயோகித்து வரும் பல வகையான காய்கறிகள் மற்றும் ஸ்பைசஸ்களில் ஒன்று பச்சை மிளகாய். இதை நாம் சட்னி, உப்புமா போன்றவற்றில் சேர்த்து உபயோகிப்பது மட்டுமின்றி, குருமா, சாம்பார், ஊறுகாய், பச்சடி போன்ற பல வகையான டிஷ்களில் சேர்த்தும் சமைக்கிறோம். தாளிக்கும்போது பச்சை மிளகாயிலிருந்து வரும் தனித்துவமான மணம் உணவுக்கு மேலும் வாசனை சேர்க்கும். நம் முன்னோர்கள் கூழ் மற்றும் பழைய சாதம் போன்ற உணவுகளை உண்ணும்போது பச்சை மிளகாயை சைட் டிஷ்ஷாக அப்படியே கடித்து சாப்பிடுவதும் உண்டு. அந்த அளவுக்கு உபயோகப்படும் பச்சை மிளகாயில் கார சுவை தவிர்த்து பல ஆரோக்கிய நன்மைகளும் உண்டு. அவை என்னென்ன என்பதை இந்தப் பதிவில் பார்க்கலாம்.

1. பச்சை மிளகாயில் அதிகளவில் நிறைந்திருக்கும் வைட்டமின் யோனது உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும்.

2. இதிலுள்ள கேப்ஸைசின் என்ற கூட்டுப் பொருள் மெட்டபாலிச ரேட்டை உயர்த்தவும், உடல் உஷ்ணத்தை உற்பத்தி செய்யும் (THERMOGENESIS) செயலில் பங்கேற்று மேம்படுத்தவும் உதவும். இதன் மூலம் உடலில் எரிக்கப்படும் கலோரிகளின் அளவு அதிகரிக்கும்.

3. கேப்ஸைசின் வலிகளைக் குறைக்கும் குணம் கொண்டதாகவும் உள்ளது. கேப்ஸைசின் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும், இரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும் உதவும். இதனால் நோய்த் தாக்குதலுக்கு ஆளாகாமல் இதயம் பாதுகாக்கப்படுகிறது.

# ராதிகாவின் தாய் கிழவி படத்தின் முதல் விமர்சனம்.. படம் எப்படி இருக்கு




அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில் நடிகை ராதிகா சரத்குமார் நடிப்பில் உருவாகியுள்ள படம் தாய் கிழவி. இப்படத்தை நடிகர் சிவகார்த்திகேயன் தனது SK Productions மூலம் தயாரித்துள்ளார்.

வருகிற 27ஆம் தேதி இப்படம் வெளிவரவுள்ளது. சமீபத்தில் இப்படத்தை உலகநாயகன் கமல் ஹாசன் பார்த்துவிட்டு, படம் சிறப்பாக வந்துள்ளது என தனது கருத்தை தெரிவித்திருந்தார். பெரிதும் எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ள தாய் கிழவி படத்தை திரையரங்க உரிமையாளர்களுக்கு சமீபத்தில் திரையிடப்பட்டது.

இந்த நிலையில், படம் பார்த்த திரையரங்க உரிமையாளர் ஒருவர், படம் குறித்து தனது முதல் விமர்சனத்தை சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

இதில், கடந்த 10 ஆண்டுகளில் சிறந்த நகைச்சுவை படம் இருக்கும் என்றும், வயிறு வலிக்க வலிக்க சிரித்து படம் பார்த்தேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் ராதிகாவின் நடிப்பு சிறப்பாக இருந்தது என்றும் கண்டிப்பாக அவருக்கு தேசிய விருது கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். கண்டிப்பாக திரையரங்கில் பார்க்க வேண்டிய படம் இது என்பதையும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் கண்டிப்பாக தாய் கிழவி படம் பந்தயம் அடிக்கும் என ரசிகர்களால் உறுதியாக நம்பப்படுகிறது.






சமந்தா தனது லுக்கை மாற்றி புது தோற்றத்தில் வந்திருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# மாணவியை தன் மனைவி ஆக்கிய நடிகர் மாதவன்.. அவரது நிஜ காதல் கதை




நடிகர் மாதவன் அவரது நடிப்பு திறமை மூலமாக தென்னிந்திய சினிமா மட்டுமின்றி ஹிந்தி சினிமா ரசிகர்களையும் கவர்ந்தவர்.

தற்போது நடிப்பது மட்டுமின்றி படங்களை இயக்கவும் செய்து வருகிறார் அவர். சமீபத்தில் மாதவன் அளித்த பேட்டியில் தனது மனைவியை முதலில் சந்தித்தது எப்படி என கூறி இருக்கிறார்.

நடிக்க வருவதற்கு முன் மாதவன் கோலாப்பூரில் PUBLIC SPEAKING மற்றும் COMMUNICATION SKILLS பற்றி பாடல் எடுக்கும் ஆசிரியராக பணியாற்றினாராம். அங்கு அவரிடம் மாணவியாக இருந்த சரிதாவை தான் காதலித்து அதன் பின் திருமணம் செய்துகொண்டாராம்.

படவிழா, பார்ட்டி போன்ற இடங்களில் எல்லாம் என் மனைவியை நான் பார்க்கவில்லை. கிளாஸ் ரூமில் தான் முதல் முறையாக பார்த்தேன் என மாதவன் கூறி இருக்கிறார்.

# "சகடாசுரன்"



தேவகியின் சகோதரனான கம்சன் கண்ணனை எப்படியாவது கொள்ள வேண்டும் ,என முடிவெடுத்து ஒரு அசுரனை கோகுலத்திற்கு அனுப்புகிறான். அவன்தான் சகடாசுரன். "சகடம்" என்றால் வண்டி, சக்கரம் என்று பொருள். அன்று கோகுலத்தில் கோலாகலம். கண்ணன் முதல் முறையாக கவிழ்ந்து தவழ ஆரம்பித்தான். என்ன, ஒரு சந்தோஷம் !!ஊரே கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். யசோதையும், கோபியர்களும் , நந்தகோபர் மற்றும் ஆடவரும் சந்தோஷமாக கொண்டாடிக் கொண்டிருந்தனர். எல்லோரும் சாப்பிடுவதற்காக உணவு சமைப்பதும், மரியாதை செய்வதும், வீட்டை அலங்காரம் செய்வதிலும், அனைவரும் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். குழந்தை கண்ணன் பசியால் காலை உதைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தான். அவனது அழுகை யசோதையின் காதில் விழவில்லை. குழந்தை மெல்ல தவழ்ந்து அங்கு நின்று கொண்டிருந்த வண்டியின் அடியில் சென்று விட்டது .அங்கு வந்த சகடாசுரன் தக்க தருணத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். கண்ணனை கொல்வதற்கான நல்ல சமயம் இதுதான் என்று அங்கு நின்ற வண்டியில், தனது சக்தியை புகுத்தி, குழந்தை கண்ணனை கொல்லுவதற்காக சக்கரம் நகர ஆரம்பித்தது. கண்ணன் தன் பிஞ்சு காலால் ஒரு உதை விட்டவுடன் வண்டி உடைந்து சாய்ந்தது. அந்த சத்தத்தை கேட்டு எல்லோரும் ஓடி வந்து பார்த்தனர். குழந்தைக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று பயந்து, யசோதை குழந்தையை தூக்கினாள். அங்கு வந்து பார்த்தவர்களுக்கு ஆச்சரியம் .இந்த வண்டி எப்படி? இப்படியானது ?என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அங்கிருந்த சில கோபியர்கள் குழந்தை தனது காலால் உதைத்ததை நாங்கள் பார்த்தோம். கண்ணனின் கால் பட்டவுடன் இந்த வண்டி உடைந்தது அந்த அரக்கனும் சுக்கு நூறாக சிதறி விட்டான். வண்டியில் ஒளிந்து கொண்டு ,கண்ணனை கொல்ல வந்த அசுரன், கண்ணனால் கொல்லப்பட்டார் .என்ற உண்மை வெளிப்பட்டது. குழந்தைக்கு ஏதாவது கண் திருஷ்டி பட்டு விட்டதோ என எண்ணி குழந்தைக்கு திருஷ்டி சுத்தினார் .கண்ணன் சிரித்தபடியே சகடாசுர வதம் என்னும் லீலை யை நடத்தினார். அவனுடைய லீலைகளில் இதுவும் ஒன்று .இந்த செய்தி கம்சனின் காதுக்கு சென்றது .ஒரு சிறிய குழந்தையை இந்த அசுரனால் கொல்ல முடியவில்லையே! என்பதைவிட ,தான் தோற்று விட்டோமே, என்று அவனுடைய கோபம் அதிகமானது. கம்சன் அடுத்ததாக பலம் பொருந்திய வேறு ஒரு அரக்கனை அனுப்ப திட்டமிட்டான்.



எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம், சென்னை.

# தினம் ஒரு தலைவர்கள் உதம்சிங் வரலாறு

உதம்சிங் 26 டிசம்பர் 1899 31 ஜூலை 1940) ஒரு இந்திய புரட்சியாளர். ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்த்திய மைக்கல் ஓ'ட்வையரை 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுட்டுக் கொன்றவர்.

இளமைக்காலம் ஜலியான்வாலாபாக் படுகொலைக்குக் காரணமான துணை ஆளுநர் மைக்கல் ஓ'ட்வையர் என்பவரை நிகழ்ச்சி நடந்து 21 ஆண்டுகளுக்குப் பின்னர் சுட்டுக்கொன்றவர் உதம் சிங் ஆவார். இவர் 1899- ஆம் ஆண்டு டிசம்பர் 26- ஆம் நாள் பஞ்சாப் மாநிலத்தில் சங்க்ரூர் மாவட்டத்தில் சுனாம் கிராமத்தில் பிறந்தவர். பெற்றோர் இவரின் இளம் வயதிலேயே இறந்துவிட்டனர். பின்னர் ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார். அதுவரை அவரது பெயர் ஷேர்சிங். அங்குதான் உதம் சிங் என்று பெயர் மாற்றப்பட்டது. 1918 இல் மெற்றிக்குலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

ஜலியான்வாலாபாக் படுகொலையும் உதம் சிங்கின் சபதமும் 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13- ஆம் நாள் ஜலியான்வாலா பாக் படுகொலை நடந்த அன்று உதம் சிங்கும் அவரது ஆசிரம நண்பர்களும் கூட்டத்திற்கு தண்ணீர் வழங்கும் பணியைச் செய்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் கலைந்து செல்லவும் வழியில்லாமல் நடத்தப்பட்ட படுகொலை அவரைக் கடுமையாகப் பாதித்துவிட்டது. அவர் இச்சம்பவத்திற்குப் பழிவாங்க பொற்கோவிலில் சபதம் பூண்டார்.

அவர் பல்வேறு பெயர்களுடன் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்தார். 1920 இல் ஆப்பிரிக்காவிற்கும் 1921 இல் நைரோபிக்கும் சென்றுவிட்டு 1924 இல் இந்தியா திரும்பினார். ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்றார். சோஹன்சிங் வாக்னா, கர்த்தார்சிங் சாரபா, லாலா ஹர்தயாள், ராஷ்பிஹாரி போஷ் போன்றோரால் உருவாக்கப்பட்ட கதர் கட்சியில் இணைந்தார். கதர் கட்சி வெளிநாடுவாழ் இந்தியர்களால் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டது. அமெரிக்காவில் மூன்றாண்டுகள் தங்கி இந்திய விடுதலைப் போராட்டத்திற்குப் பாடுபட்டார். 1927 இல் பகத் சிங் அழைத்ததால் இந்தியா திரும்பினார். 1927 இலேயே அனுமதியின்றி ஆயுதங்களை வைத்திருந்ததற்காகவும் கதர் கட்சி பிரசுரங்கள் வைத்திருந்ததற்காகவும் கைது செய்யப்பட்டு கடுங்காவல் தண்டனை பெற்றார். 1931 இல் விடுதலை ஆனார்.

சபதம் நிறைவேற்றுதல் மூன்றாண்டுகள் மைக்கல் ஓ'ட்வையரை கொலை செய்யும் திட்டத்துடன் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1933- ல் காஷ்மீர் சென்று ஜெர்மனிக்குத் தப்பிவிட்டார். அவர் இத்தாலி, பிரன்ஸ், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா வழியாக 1934- ல் லண்டனை அடைந்தார். மைக்கல் ஓ'ட்வையரை கொல்ல சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் காத்திருந்தார். 1940- ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்து 21 ஆண்டுகள் கழித்து அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. கேக்ஸ்டன் ஹால் என்ற இடத்தில் கிழக்கிந்திய சங்கம், மத்திய ஆசிய சங்கம் இவற்றின் கூட்டம் நடந்தது. [6] மைக்கேல் ஓ டையர் ஒரு பேச்சாளர். சிங் ஒரு புத்தகத்தில் ரிவால்வர் மாதிரியே வெட்டி அதனுள் ரிவால்வரை வைத்து எடுத்துச் சென்றார். சுவரின் அருகில் நின்றார். கூட்ட முடிவில் டையர் மேடையை நோக்கிச் செல்லும் போது இருமுறை சுட்டார். டையர் உடனே இறந்துவிட்டார். மீண்டும் சுட்டதில் ஜெட்லாந்து, லூயிஸ்டேன், லார்டு லாமிங்க்டன் ஆகியோர் காயமுற்றனர் . சிங் தப்பிக்க முயற்சி செய்யவில்லை. மைக்கேல் ஓ டையர் படுகொலை குறித்த கருத்துக்கள் ஸ்காட்லாந்துயார்டு அருங்காட்சியகத்தில் அவரது கத்தி, ஆயுதம், டைரி, துப்பாக்கிக்குண்டுகள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன.



ஆளுநர் டையரின் கொலை இந்தியாவில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. மக்கள் மைக்கேல் ஓ டையரின் கொடும் செயலை மறக்கவில்லை . வழக்கம் போல் காந்திஜி அவரது செயலைக் கண்டித்தார் . ஆனால் வரலாற்று ஆய்வாளர்கள் 1942- ல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு போராட்டத்திற்கு உத்தம் சிங்கால் ஏற்பட்ட உணர்ச்சி மிகவும் உதவியது என்று கூறுகின்றனர்.

நேதாஜி சிங்கின் செயலை வரவேற்றார். R.C. ஜாகர்வாரா தனது "CONSTITUTIONAL HISTORY OF INDIA AND NATIONAL MOVEMENT" என்ற நூலில் சிங்கின் தீரச்செயல் இந்திய சுதந்திரத்திற்குப் புத்துணர்வு ஊட்டியது என்று எழுதியுள்ளார். இந்திய அரசாங்கத்தின் இரகசிய குறிப்பு ஆளுநர் டையரின் கொலை மக்களுக்கு மிகுந்த திருப்தியை அளித்தது என்று கூறுகிறது[10]. உலகம் முழுவதும் செய்தித்தாள்கள் ஜாலியன் வாலாபாக் படுகொலையை நினைவுகூர்ந்து மைக்கேல் ஓ டையர்தான் இதற்குப் பொறுப்பாளி என்று எழுதின. டைம்ஸ் ஆஃப் லண்டன் என்ற பத்திரிக்கை உத்தம்சிங் சுதந்திரப் போராட்ட வீரர் என்றும் அவரது செயல் ஒடுக்கப்பட்ட இந்தியரின் உணர்ச்சி வெளிப்பாடு என்றும் எழுதியது.

1940- ஆம் ஆண்டு ஜாலியன் வாலாபாக் படுகொலை 21- ஆவது நினைவு காங்கிரஸ் கூட்டத்தில் உத்தம் சிங் மிகவும் போற்றப்பட்டார். பஞ்சாப் காங்கிரஸ் டையருக்கு அஞ்சலி செலுத்தவும் உத்தம் சிங் செயலைக் கண்டிக்கவும் மறுத்துவிட்டது. அக்காலத்தில் ரோம் நகரில் அதிகம் வெளியான பெர்கெரெட் (BERGERET) என்ற பத்திரிக்கை சிங்கின் செயலை தீரச்செயல் என்று பாராட்டியது. ஜெர்மனி வானொலி ஒடுக்கப்பட்ட மக்கள் குண்டுகளால் பேசிவிட்டனர் என்றும் இந்தியர்கள் யானையைப்போல எதிரிகளை மன்னிக்கவே மாட்டார்கள் என்றும் 20 ஆண்டுகள் கழித்தும் அவர்கள் பழிதீர்த்துவிட்டார்கள் என்றும் கூறியது. பெர்லின் பத்திரிக்கை உத்தம் சிங் இந்திய சுதந்திரத்தின் வழிகாட்டி என்று கூறியது. இந்துசுத்தான் சோசலிசக் குடியரசு அமைப்பு பகத் சிங் மற்றும் உத்தம் சிங்கின் செயல் குறித்த காந்திஜியின் விமர்சனத்தைக் கண்டித்தது. தூக்குத் தண்டனை உத்தம் சிங் சிறையில் 42 நாள் உண்ணாவிரதம் இருந்தார். அவர் கட்டாயப்படுத்தி உணவு உண்ண வைக்கப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் "நான் அவரைப் பழிவாங்க எண்ணியிருந்தேன். அவர் அதற்குப் பொருத்தமானவர்தான்" என்று கூறினார் . 1940- ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று அவர் பென்டோன்வில் சிறைச்சாலையில் அவர் தூக்கிலிடப் பட்டார். அன்று மதியமே அவரது உடல் சிறைச்சாலை வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

இந்திய அரசின் அஞ்சலி நேருஜி 1962-ல் சிங்கின் செயலைப் பாராட்டி அவர் போன்றவர்களால்தான் இந்தியா சுதந்திரம் அடைந்தது என்று கூறினார். 1974- ல் சாதுசிங் திண்ட் என்ற சுல்தான்பூர் லோதி வேண்டுகோளுக்கிணங்கி இந்திய அரசு கேட்டுக்கொண்டதால் பிரித்தானிய அரசு உத்தம் சிங்கின் சவப்பெட்டியை அனுப்ப சம்மதித்தது. சாதுசிங் திண்ட் சென்று உத்தம் சிங்கின் சவப்பெட்டியை வாங்கிவந்தார். அதனை காங்கிரஸ் தலைவர் சங்கர் தயாள் சர்மா, பஞ்சாப் முதல்வர் ஜெயில் சிங் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். பிரதமர் இந்திரா காந்தி மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அவரது சொந்த கிராமமான சுனாம் கிராமத்தில் அவரது உடல் எரியூட்டப்பெற்று சட்லஜ் நதியில் அஸ்தி கரைக்கப்பட்டது.

# ஏஐ மாநாட்டில் காங்கிரஸார் ஆர்ப்பாட்டம் கண்டனத்துக்குரியது: டில்லி உயர்நீதிமன்றம்

**மும்பை, பிப்.24:**

டில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) உச்சி மாநாட்டில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகளின் நடத்தை கண்டனத்துக்குரியது என்றும் சர்வதேச அரங்கில் இந்தியாவின் பிம்பத்தை சேதப்படுத்தும் தாக்குதல் என்றும் தில்லி உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

ஏ.ஐ. உச்சி மாநாடு நடைபெற்ற பாரத் மண்டபத்திற்குள் சனிக்கிழமை நுழைந்த காங்கிரஸ் நிர்வாகிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் இந்தியா அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் சமரசம் செய்யப்பட்டது போன்ற வாசகங்கள் கொண்ட ஆடைகளை அணிந்திருந்தனர்.

பிரதமர் மோடிக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன், ஊழியர்களைத் தடுத்து, காவல்துறையினரைத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து, அவர்களில் 4 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ரவி, அவர்களுக்கு 5 நாள்கள் போலீஸ் காவலை அனுமதித்து பிறப்பித்த உத்தரவில் கூறியதாவது: போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிகார், உத்தரபிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் தலைமறைவாகும் வாய்ப்பு உள்ளது. இந்த போராட்டம் கண்டனத்துக்குறியது. உலகளாவிய பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்களைக் கொண்ட உயர் பாதுகாப்பு அரங்கில் இந்தியாவின் ராஜதந்திர பிம்பத்தை சேதப்படுத்துவதாக உள்ளது. இத்தகைய நடத்தை முறையான எதிர்ப்பை காட்டிலும் பொது ஒழுங்கு மற்றும் நாட்டின் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என நீதிபதி தெரிவித்தார். அவர்கள் மீது பாரதீய நியாய சன்ஹிதா பிரிவுகள் 121 (அரசு ஊழியரை கடமையிலிருந்து தடுக்க காயப்படுத்துதல்) மற்றும் 61(2) (குற்றச் சதி) ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு மாநாடு என்று அழைக்கப்படும் இந்த 5 நாள் ஏ.ஐ. உச்சி மாநாடு பிப்.16-ஆம் தேதி தில்லி பாரத் மண்டபத்தில் தொடங்கி பிப்.20-ஆம் தேதி நிறைவடைந்தது.

# தெலங்கானாவில் மாவோயிஸ்டு கமாண்டர் தேவுஜி உட்பட 21 பேர் போலீஸில் சரண்

**ஐதராபாத், பிப்.24:**



மாவோயிஸ்டு இயக்கத்தின் கமாண்டர் தேவுஜி மற்றும் அவருடன் சேர்ந்து 20 பேர் போலீஸில் சரணடைந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

நாட்டில் மாவோயிஸ்டு, நக்சல்களின் வன்முறையை அடுத்த மாதம் மார்ச் 31-ம் தேதிக்குள் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திட்டவட்டமாக கூறியுள்ளார். அதன்படி, ஆந்திரா, தெலங்கானா, சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களில் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான என்கவுன்ட்டர்கள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. இதில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமானோர் அந்தந்த மாநிலங்களில் சரணடைந்து வருகின்றனர்.

இந்நிலையில், தெலங்கானா மாநிலத்தில் தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியாவை (மாவோயிஸ்டு) சேர்ந்த கமாண்டர் திப்பிரி திருப்பதி (எ) தேவுஜி (எ) தேவ்ஜி (62) போலீஸில் சரணடைந்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது. அவருடன் மேலும் 20 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து போலீஸார் கூறும்போது, "மாவோயிஸ்டு கமாண்டர் தேவுஜி எங்களிடம் தான் இருக்கிறார். அவர் சரணடைந்தது குறித்து ஒன்றிரண்டு நாட்களில் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்வோம்" என்று கூறியுள்ளனர்.

கடந்த 2025ம் ஆண்டு மாவோயிஸ்ட் மூத்த தலைவர் நம்பலா கேசவ ராவ் (எ) பசவராஜ் என்கவுன்ட்டரில் இறந்தார். அவருக்குப் பதில் தேவுஜி அந்தப் பொறுப்புக்கு மாற்றப்பட்டதாக கூறப்படுகிறது. எனினும், இந்தத் தகவல்களை மாவோயிஸ்டு அமைப்பு மறுத்துள்ளது. சரணடைபவர்களுக்கு பல்வேறு மறுவாழ்வு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

# சர்வதேச போதை பொருள் கும்பலுடன் தொடர்பு; ராணுவ அதிகாரி, முன்னாள் போலீஸ் அதிகாரி உள்பட 6 பேர் கைது

**சண்டிகார், பிப்.24:**

பாகிஸ்தானை அடிப்படையாக கொண்ட போதை பொருள் கடத்தல் கும்பல் டிரோன்கள் உதவியுடன் எல்லை கடந்து ஊடுருவி நாட்டுக்குள் போதை பொருட்களை கடத்த முயன்றது கடந்த காலத்தில் தெரிய வந்தது. அதனை போலீசார் எல்லை பகுதியிலேயே தடுத்து, கைப்பற்றினர்.

இந்நிலையில், இந்த போதை பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்புடையவர்களை கண்டறியும் பணியில் பஞ்சாப் போலீசார் ஈடுபட்டனர். இதில், பணியில் உள்ள ராணுவ அதிகாரி, முன்னாள் போலீஸ் அதிகாரி, 2 பெண்கள் உள்பட 6 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.


இதுபற்றி பஞ்சாப் டி.ஜி.பி. கவுரவ் யாதவ் கூறும்போது, போதை பொருள் கடத்தல் கும்பல் கைது நடவடிக்கையின்போது, அவர்களிடம் இருந்து 4.8 கிலோ எடை கொண்ட ஹெராயின், ரூ.30 ஆயிரம் பணம், ஒரு பிஸ்டல் மற்றும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட சொகுசு கார் மற்றும் ஜீப் ஆகியவையும் பறிமுதல் செய்யப்பட்டன என்றார். இதில், ஜர்னைல் சிங் இந்திய ராணுவத்தில் பணியாற்றி வருகிறார். பஞ்சாப் காவல் துறையில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட அமர்தீப் சிங், டிம்பிள் ராணி, ராமன்தீப் கவுர், சரப்ஜித் சிங் மற்றும் அமிரித்பால் சிங் என 6 பேரை போலீசார் கைது செய்தனர்.

# "சர்வதேச நிகழ்வுகளில் கண்ணியம் முக்கியம்" – இளைஞர் காங்கிரஸ் போராட்டத்துக்கு மார்கரெட் ஆல்வா கண்டனம்

**பெங்களூரு, பிப்.24:**



டெல்லியில் நடைபெற்ற ஏஐ உச்சி மாநாட்டில் இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் ஆடையை களைந்து போராட்டம் நடத்தியதற்கு காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான மார்கரெட் ஆல்வா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மார்கரெட் ஆல்வா, "சர்வதேச நிகழ்வுகளின்போது கண்ணியம் காக்கப்பட வேண்டும், ஒழுக்கம் பராமரிக்கப்பட வேண்டும், பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

டையை களைந்து போராட்டம்: டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் கடந்த 20-ம் தேதி இளைஞர் காங்கிரஸை சேர்ந்த சிலர் அரங்கம் 5-ல் திடீரென நுழைந்தனர். பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் புகைப்படங்கள் அச்சிடப்பட்ட டி சர்ட்களை அவர்கள் அணிந்திருந்தனர். அந்த டி சர்ட்களில், இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், எப்ஸ்டீன் பைல் உள்ளிட்ட வாசகங்கள் இருந்தன.

திடீரென இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் டி சர்ட்டை களைந்து பிரதமர் மோடிக்கு எதிராகவும் இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிராகவும் கோஷமிட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் நிர்வாகிகளில் கிருஷ்ணா ஹரி, குந்தன் யாதவ், அஜய் குமார், நரசிம்ம யாதவ் ஆகிய 4 பேரை டெல்லி போலீஸார் கைது செய்தனர். அவர்களை 5 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

5-வது நபர் கைது: ஆடைகளை களைந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 4 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நிலையில், 5வது நபர் இன்று கைது செய்யப்பட்டார். ஜிதேந்திர யாதவ் என்ற அந்த நபரை மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் போலீஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட கிருஷ்ணா ஹரியின் காரில் இருந்து போராட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்ட டி சர்ட்டுகள் மற்றும் போஸ்டர்களை கைப்பற்றி உள்ளதாக தெரிவித்த போலீஸார், மேலும் ஒரு காங்கிரஸ் நிர்வாகி பிடிபட்டுள்ளார் எனக் கூறினர்.

# முன்னாள் ரயில்வே அமைச்சர் முகுல் ராய் காலமானார்

**கொல்கத்தா, பிப்.24:**


முன்னாள் ரயில்வே அமைச்சர் முகுல் ராய் காலமானார். கொல்கத்தாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் திங்கட்கிழமை (பிப்.23) அதிகாலை 1.30 மணி அளவில் மாரடைப்பு காரணமாக அவர் உயிர் பிரிந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

மேற்குவங்க மாநிலத்தில் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவராக திகழ்ந்தவர் முகுல் ராய். திரிணமூல் காங்கிரஸ் கட்சி நிறுவப்பட்டது முதல் அக்கட்சியின் உறுப்பினராக இருந்தார். 1998 முதல் 2015 வரையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச்செயலாளராக இருந்தார். 2006 முதல் 2017 வரையில் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார். 2-வது ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மத்திய இணை அமைச்சர் மற்றும் ரயில்வே அமைச்சராகவும் இருந்துள்ளார்.

கடந்த 2017-ல் பாஜக-வில் அவர் இணைந்தார். 2021-ல் நடைபெற்ற மேற்குவங்க மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக போட்டியிட்டு கிருஷ்ணாநகர் தொகுதியில் வெற்றி பெற்றார். பின்னர் மீண்டும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

இந்தச் சூழலில் கடந்த சில நாட்களாக கோமா நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், மாரடைப்பு காரணமாக அவர் மரணம் அடைந்தார். அவரது மறைவுக்கு மேற்குவங்க மாநில அரசியல் கட்சி பிரமுகர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவுடன் இடைக்கால வர்த்தக ஒப்பந்தம்: பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு!




**புதுடெல்லி, பிப்.24:**

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்த அதிரடி பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என அமெரிக்க உச்சநீதிமன்ற தீர்ப்பளித்தது மற்றும் அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து உலக நாடுகள் மீது புதிய சீரான 10 சதவீத பரஸ்பர வரியை செவ்வாய்க்கிழமை (பிப்.24) அமலுக்கு வரும் வகையில் டிரம்ப் விதித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வர்த்தக அமைச்சக வட்டாரங்கள் மேலும் கூறுகையில், 'வரி விதிப்பு மீதான அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் அதன் பிறகு அமெரிக்க அரசு நிர்வாகம் எடுத்துள்ள நடவடிக்கைகளின் தாக்கம் குறித்து ஆராய்வதற்கு அவகாசம் தேவை என்பதால், இடைக்கால வர்த்தக ஒப்பந்த விதிமுறைகளை இறுதி செய்ய வாஷிங்டனில் திங்கள்கிழமை (பிப்.23) நடைபெறவிருந்த இருதரப்பு பேச்சுவார்த்தையை ஒத்திவைப்பது என இரு நாடுகள் சார்பிலும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் வசதியான வேறு தேதியில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறும்' என்றனர்.

அமெரிக்க அதிபராக இரண்டாவது முறை டிரம்ப் பதவியேற்றதும், இந்தியா உள்பட 60 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதித்த அதிரடி பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் பிப்ரவரி 20-ஆம் தேதி தீர்ப்பளித்தது. இது, டிரம்ப் நிர்வாகத்துக்கு பெரும் பின்னடைவானது.

இந்தத் தீர்ப்பை மீறி, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது புதிய சீரான 10 சதவீத பரஸ்பர வரியை டிரம்ப் வெள்ளிக்கிழமை விதித்தார். இதுதொடர்பாக, டிரம்ப் கையொப்பமிட்ட பிரகடனத்தை அமெரிக்க அதிபர் அலுவலகமான வெள்ளை மாளிகை வெளியிட்டது. இந்த நிலையில், வரி விதிப்பு தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பு காரணமாக நாட்டின் பொருளாதார சரிவு தொடர்வதால் உலக நாடுகள் மீதான 10 சதவீத பரஸ்பர வரி, 15 சதவீதமாக உயர்த்தப்படும். அவ்வாறு, உலக நாடுகள் மீது உயர்த்தப்பட்ட புதிய வரிகள் தொடர்பான விவரத்தை அமெரிக்க நிர்வாகம் அடுத்த சில மாதங்களில் வெளியிடும் என்று டிரம்ப் சனிக்கிழமை அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# நடப்பு நிதியாண்டில் 500 குற்றப் பத்திரிகை தாக்கல்: அமலாக்கத் துறை இலக்கு

**புதுடெல்லி பிப்.24:**

நடப்பு நிதியாண்டில் சட்ட விரோத பணப் பரிவர்த்தனை வழக்குகளில் 500 குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்ய அமலாக்கத் துறை இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதுகுறித்து அமலாக்கத் துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அமலாக்கத் துறை மண்டல அதிகாரிகளுக்கான மாநாடு புது தில்லிக்கு வெளியே 3 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குஜராத்தின் கெவாடியா, ஜம்மு-காஷ்மீரின் ஸ்ரீநகரைத் தொடர்ந்து, அஸ்ஸாம் மாநிலம் குவாஹாட்டியில் அமலாக்கத் துறை இயக்குநர் ராகுல் நவீன் தலைமையில் டிசம்பர் மாதம் 19-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை மாநாடு நடைபெற்றது.

அதில் நடப்பு நிதியாண்டில் சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்குகளில் 500 குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்வதென மீண்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அடுத்த நிதியாண்டில் இதைவிட அதிக எண்ணிக்கையில் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தொடர்பான வழக்குப்பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து ஒரு ஆண்டு முதல் 2 ஆண்டுகளுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்றும் அதிகாரிகளிடம் வலியுறுத்தப்பட்டது. பிரச்னைக்குரிய வழக்குக்கு மட்டும் இந்தக் கால அளவு பொருந்தாது எனவும் குறிப்பிடப்பட்டது. சட்டவிரோத பணப்பரிவர்த்தனை சட்டத்தில் உள்ள குற்றப் பிரிவுகளின்கீழ் அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டு, பொறுப்புடனும், எச்சரிக்கையுடனும், நேர்மையாகவும், கடமையுணர்வுடனும் அவர்கள் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. சம்மன் மற்றும் பிற நோட்டீஸ்களை நீதித் துறை மூலம் அனுப்ப வேண்டும் என்றும், அப்போது எதற்காக அவை அனுப்பப்படுகிறது என்பதை தெளிவாக அதிகாரிகள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டது.

மாநாட்டில் வெளிநாடுகளில் உள்ள சட்டவிரோத சொத்துகளைக் கண்டறிவது, சட்டவிரோத பணப்பரிவர்த்தனைக்குப் பயன்படுத்தப்படும் வழிகளைக் கண்டறிவது, திவால் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவது, டிஜிட்டல் கைது மற்றும் கணினி வழி குற்ற வழக்குகள் குறித்தும், அவை அதிகரித்து வருவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

# சரத்பவார் ஆஸ்பத்திரியில் அனுமதி

**புனே, பிப்.24:**

மூத்த அரசியல்வாதியும் தேசியவாத காங்கிரஸ் தலைவருமான சரத்பவார் நீர்சத்து குறைபாடு காரணமாக புனேயில் உள்ள தனியார் மருத்துவமனையில் இன்று அனுமதிக்கப்பட்டார். 85 வயதான அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும், 2 நாட்கள் அவர் மருத்துவமனையில் இருப்பார் என்றும், அதன்பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என்றும் மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சரத்பவார் ஏற்கனவே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 14-ம் தேதி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜம்மு - காஷ்மீர்: பாதுகாப்புப் படையின் 'ஆபரேசன் த்ராஷியில்' ஜெய்ஷ்-ஏ-முகமது தளபதி பலி!

**புதுடெல்லி, பிப்.24:**

ஜம்மு - காஷ்மீரில் நடைபெற்ற ஆபரேசன் த்ராஷி-1 நடவடிக்கையில் மேலும் ஒரு பயங்கரவாதியின் உடல் ஞாயிற்றுக்கிழமை (பிப். 22) கண்டெடுக்கப்பட்டது. பயங்கரவாதச் செயல் தடுப்பு நடவடிக்கையான ஆபரேசன் த்ராஷி-1 ஜம்மு - காஷ்மீரில் 36-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்தது. அதில், முக்கியமாக பாகிஸ்தானைச் சார்ந்த ஜெய்ஷ்-ஏ-முகமது (ஜே.ஏ.எம்.) பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த 3 பேர் கிஷ்த்வார் மாவட்டத்தில் பாதுகாப்புப்படையின் என்கவுன்ட்டர் நடவடிக்கைகளில் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கிஷ்த்வார் மாவட்டத்தில் பயங்கரவாதிகள் தஞ்சமடைந்திருந்த மண் குடிசை வீட்டில் நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சண்டையில் அந்த வீடு தீப்பற்றி கருகியது. அதில், அங்கிருந்த 3 பயங்கரவாதிகள் உடல் கருகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டன. அவர்களது உடல்களை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதில் பலியான ஒரு நபர், தேடப்பட்டு வந்த ஜே. ஏ. எம். தளபதி சைஃபுல்லாவாக இருக்கலாம் என்பது புலனாகியிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காங்கிரசாரின் போராட்டம் நாட்டுக்கு அவமானம்; அகிலேஷ் யாதவ் கண்டனம்

**லக்னோ, பிப்.24:**

செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) உச்சிமாநாடு டெல்லியில் நடைபெற்றது. இந்த மாநாடு நடைபெற்று கொண்டிருக்கும்போது இந்தியா-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இளைஞர் காங்கிரசார் சட்டைகளை கழற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு பா.ஜனதா கடும் கண்டனம் தெரிவித்தது. காங்கிரசுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் மும்பை சென்ற ராகுல் காந்திக்கு பா.ஜனதாவினர் கருப்புக்கொடி காட்டினர்.

இந்த நிலையில் ஏ.ஐ. மாநாட்டில் காங்கிரசார் சட்டைகளை கழற்றி போராட்டத்தில் ஈடுபட்டதற்கு இந்தியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள சமாஜ்வாடி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-"நமக்குள் உள் பிளவுகள் இருக்கலாம். பா.ஜனதா பொய் சொல்கிறது என்பது நாட்டுக்கே தெரியும். ஆனால் வெளிநாட்டு பிரதிநிதிகள் பங்கேற்ற ஏ.ஐ. மாநாட்டில் அவர்களது முன்னிலையில் சட்டையை கழற்றி காங்கிரசார் நடத்திய போராட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இது நாட்டுக்கே அவமானத்தை ஏற்படுத்தும். இது மாதிரியான போராட்டம் கண்டனத்துக்குரியது," என்று அவர் கூறினார்.

# ராஜஸ்தானில் ஒரே நாளில் திருமணம் செய்ய இருந்த சகோதரிகள் இருவர் தற்கொலை

**ஜோத்பூர், பிப்.24:**

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் ஒரே நாளில் திருமணம் செய்ய இருந்த சகோதரிகள் இருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்த சகோதரிகள் இருவரும் ஷோபா (25) மற்றும் விமலா (23) என தெரியவந்துள்ளது. இவர்கள் ஜோத்பூரில் உள்ள மனாய் கிராமத்தை சேர்ந்தவர்கள். அவர்களுக்கு சனிக்கிழமை (பிப்.21) திருமணம் நடைபெறுவதாக இருந்தது. கல்யாண கொண்டாட்டத்துக்கு தயாராக இருந்த அவர்களின் குடும்பத்தினர் சோகத்தில் மூழ்கியுள்ளனர். அவர்களது தற்கொலை மரணத்துக்கான காரணம் குறித்து காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர். உயிரிழந்த இருவரும் தனியார் பள்ளியில் ஆசிரியர்களாக பணியாற்றி வந்தனர். முதற்கட்ட விசாரணையில் அவர்கள் இருவரும் விஷம் அருந்தி உயிரிழந்திருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும் உடற்கூறு ஆய்வறிக்கை வந்த பிறகு மரணத்துக்கான காரணம் தெரியவரும் என போலீஸார் தெரிவித்துள்ளனர். இயற்கைக்கு மாறான மரணம் என வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருவதாக போலீஸார் கூறியுள்ளனர்.

# காப்பி அடித்ததை கண்டித்த பேராசிரியரை தாக்கிய கல்லூரி மாணவர்: கர்நாடகாவில் அதிர்ச்சி சம்பவம்

**பெங்களூரு, பிப்.24:**

கர்நாடக மாநிலம் கலபுர்கி மாவட்டத்தில் உள்ள குவெம்பு நகரில் டாக்டர் மலகாரெட்டி ஹோமியோபதி கல்லூரி உள்ளது. அங்கு நேற்று முன்தினம் மூன்றாம் பருவ ஹோமியோபதி தேர்வு நடைபெற்றது. தேர்வு மையத்தில் ஷஃபாஸ் கான் என்ற மாணவர் செல்போனை மறைத்து வைத்து காப்பி அடித்ததை கண்காணிப்பு பணியில் இருந்த பேராசிரியர் சிவராஜ் கண்டுபிடித்தார்.

உடனடியாக அவரது விடைத்தாளை வாங்கிய சிவராஜ், தேர்வு மையத்தில் இருந்து வெளியே செல்லுமாறு கூறினார். இதனால் கோபமடைந்த ஷஃபாஸ் கான், அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அவரை முகத்தில் கடுமையாக தாக்கினார். அங்கிருந்த மற்ற மாணவர்கள் உடனடியாக ஷஃபாஸ் கானை பிடித்து வெளியே கொண்டு சென்றனர். தேர்வு மையத்தில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவான இந்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பேராசிரியரை தாக்கிய மாணவர் ஷஃபாஸ் கான் கேரள மாநிலத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. அடுத்தடுத்த தேர்வுகளை எழுதவும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.




## சென்னை | கூரியர் மூலம் போதைப்பொருள் வாங்கி கடத்திய இருவர் கைது



**சென்னை, பிப்.24:** கூரியர் மூலம் தாய்லாந்திலிருந்து போதைப்பொருள் வாங்கி, கடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர். சென்னையில் போதைப்பொருள் கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்களை போலீஸார் கைது செய்து வருகின்றனர்.

குறிப்பாக போதைப்பொருள் கும்பலை கைது செய்ய சென்னையில் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு போலீஸார் காவல் நிலைய போலீஸாருடன் ஒருங்கிணைந்து கண்காணிக்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு போலீஸார் வானகரம் போலீஸாருடன் இணைந்து வானகரம் அடையாளம்பட்டு, சர்வீஸ் ரோட்டில் நேற்று கண்காணித்தனர். அப்போது, அந்த வழியாக சந்தேகப்படும்படி வந்த 2 கார்களை மறித்து சோதனை செய்தபோது, மெத்தம் பெட்டமைன் என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதை பறிமுதல் செய்த போலீஸார் வியாசர்பாடியைச் சேர்ந்த தினேஷ் என்ற பப்லு (34), கொரட்டூரைச் சேர்ந்த மெக்கலன் ட்ரெவர் (43) ஆகிய இருவரை கைது செய்தனர்.

இதன் தொடர்ச்சியாக, போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு போலீஸார் வானகரம் போலீஸாருடன் இணைந்து வானகரம் அடையாளம்பட்டு, சர்வீஸ் ரோட்டில் நேற்று கண்காணித்தனர். அப்போது, அந்த வழியாக சந்தேகப்படும்படி வந்த 2 கார்களை மறித்து சோதனை செய்தபோது, மெத்தம் பெட்டமைன் என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதை பறிமுதல் செய்த போலீஸார் வியாசர்பாடியைச் சேர்ந்த தினேஷ் என்ற பப்லு (34), கொரட்டூரைச் சேர்ந்த மெக்கலன் ட்ரெவர் (43) ஆகிய இருவரை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 18 கிராம் மெத்தம்பெட்டமைன், 100 கிராம் உயர் வகை கஞ்சா, 1.3 கிலோ கஞ்சா, ரூ.1.12 லட்சம், 4 செல்போன்கள் மற்றும் 2 கார்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

விசாரணையில், தினேஷ் பழைய பொருட்களை வாங்கி விற்பனை செய்யும் கடை நடத்தி வருவதும், மெக்கலன் ட்ரெவர் இருசக்கர வாகன மெக்கானிக் என்பதும் இருவரும் தாய்லாந்திலிருந்து கூரியர் மூலம் போதைப்பொருட்களை வாங்கி கடத்திச் சென்றதும் தெரியவந்தது. இதையடுத்து, இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## திருப்பூரில் வங்க தேசத்தினர் 6 பேர் கைது: தமிழகம் முழுவதும் கண்காணிப்பு தீவிரம்

**சென்னை, பிப்.24:** திருப்பூரில் வங்க தேசத்தினர் 6 பேர் கைதான நிலையில், பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக வேறு யாரேனும் உள்ளனரா என்பது தொடர்பாக தமிழகம் முழுவதும் போலீஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர்.



பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாகவும், பாதுகாப்பு படையினரை அச்சுறுத்தும் வகையிலும் டெல்லியில் சுவரொட்டி ஒட்டப்பட்டது. இதில் தொடர்புடையவர்களுக்கு ஆதரவாக, திருப்பூரில் முறைகேடாக தங்கியிக்கும் வங்க தேசத்தினர் சிலர் செயல்பட்டதாகக் கூறி டெல்லி போலீஸார் அம்மாபாளையம், பல்லடம், ஊத்துக்குளியைச் சேர்ந்த 6 பேரை கைது செய்து,டெல்லிக்கு அழைத்துச் சென்றனர்.

தொடர்ந்து, திருப்பூர் மாநகரில் பல்வேறு இடங்களில் தங்கியுள்ள வடமாநிலத்தவர் மற்றும் சந்தேக நபர்கள் குறித்து போலீஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். பிடிபட்ட 6 பேருடன் தொடர்பில் இருந்த நபர்கள் குறித்தும் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

வங்க தேசத்தினர் தங்களை மேற்குவங்க மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றுகூறி திருப்பூர் பனியன் நிறுவனங்களில் வேலைக்கு சேர்வதால், மேற்குவங்க மாநிலத் தொழிலாளர்கள் அதிகம் பணிபுரியும் இடங்களில் மத்திய, மாநில உளவுத் துறை போலீஸார் ரகசியமாக விசாரித்து வருகின்றனர்.

அதேபோல, ஏற்கெனவே கைதானவர்கள் மற்றும் முறைகேடாகத் தங்கியிருந்து கைதானவர்கள் யாரும் தொடர்பில் உள்ளார்களா என்பது தொடர்பாகவும் உளவுத் துறை போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இதுகுறித்து திருப்பூர் காவல் ஆணையர் ராஜேந்திரன் கூறும்போது, "திருப்பூரில் கைது செய்யப்பட்ட 6 பேரிடம், டெல்லி போலீஸார் விசாரிக்கத் தொடங்கி உள்ளனர். அவர்களுடன் வேறு யாருக்கும் தொடர்புள்ளதா என்பது இனிமேல் தான் தெரியவரும். கடந்த சில மாதங்களில் 200-க்கும் மேற்பட்ட வங்க தேசத்தினர் திருப்பூரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரத்தை அடுத்து, அனைத்து இடங்களிலும் சந்தேகப்படும் நபர்கள் தொடர்பாக ரகசியமாக விசாரித்து வருகிறோம். குற்றவாளிகள் யாரும் தப்ப முடியாது" என்றார்.

இதற்கிடையில், பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மட்டுமின்றி, வேறு பயங்கரவாத அமைப்புகளுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவாளர்கள் யாரேனும் உள்ளனரா என்று தமிழக தீவிரவாத தடுப்புப் பிரிவு போலீஸார் தீவிரமாக விசாரித்து வருவதுடன், தமிழகம் முழுவதும் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர்.

இவர்களுக்கு உதவியாக மாநில உளவுப் பிரிவு போலீஸாரும் களத்தில் இறக்கியுள்ளனர். சந்தேக நபர்கள் யாராக இருந்தாலும், அவர்களைப் பிடித்து விசாரிக்க டிஜிபி உத்தரவிட்டுள்ளார். மேலும், சந்தேக நபர்கள் குறித்து தகவல்களைத் தெரிவிக்கலாம் என்றும், தகவல் அளிப்போரின் விவரம் ரகசியமாக வைக்கப்படும் என்றும் காவல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தனியார் இடத்தில் மின்வாகன சார்ஜிங் மையம்: நில உரிமையாளர், நிறுவனம் ஒருங்கிணைக்க இணையதளம்

**சென்னை, பிப்.24:** தனியார் இடத்தில் சார்ஜிங் மையம் அமைக்க நில உரிமையாளர்கள், நிறுவனங்களை ஒருங்கிணைக்க இணையதளத்தை மின்வாரியம் ஏற்படுத்தவுள்ளது. நாடு முழுவதும் வாகனங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க மின்சார வாகனங்களைப் பயன்படுத்த மத்திய, மாநில அரசுகள் அறிவுறுத்தின.



இதற்காக பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தற்போது மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்கள், கார், பேருந்து உள்ளிட்ட வாகனங்களின் பயன்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

இந்த வாகனங்களுக்கு எளிதான சார்ஜிங் வசதி கிடைக்க மாநகரில் தலா 3 கி.மீ. தொலைவிலும், நெடுஞ்சாலைகளில் தலா 25 கி.மீ. தொலைவிலும் ஒரு சார்ஜிங் மையம் அமைக்கப்பட உள்ளது.

அரசுத் துறைகள் நேரடியாகவும், தனியார் நிறுவனங்கள் வாயிலாகவும் சார்ஜிங் மையங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் சார்ஜிங் மையம் அமைக்க இடம் கிடைப்பது சிரமமாக உள்ளது.

எனவே தனியார் இடத்தில் சார்ஜிங் மையம் அமைக்க, இடத்தின் உரிமையாளர் மற்றும் சார்ஜிங் மையம் அமைக்கும் நிறுவனத்தை ஒருங்கிணைக்க, தனி இணையதளத்தை உருவாக்கும் பணியில் தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம் ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது: இந்த இணையதளம் வாயிலாக, சார்ஜிங் மையம் அமைக்க இடம் வழங்க விரும்பும் உரிமையாளர்கள் தகவல் தெரிவிக்கலாம். அந்த தளத்தில் நிறுவனங்களின் விவரங்களும் இருக்கும்.

இருதரப்பும் தங்களுக்குள் நேரடியாக பேசி சார்ஜிங் மையம் அமைக்கலாம். இடத்தின் உரிமையாளருக்கு வாடகை வருவாய் கிடைக்கும். நிறுவனங்களுக்கு விரைவாக இடம் கிடைக்கும் என்பதால், அதற்கு ஏற்ப சார்ஜிங் மையங்களும் துரிதமாக அமைக்கப்படும். எனவே மின்சார வாகனங்களுக்கு தடையின்றி சார்ஜிங் வசதி கிடைக்கும்.

இந்தப் பணி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்

# கடந்த 5 ஆண்டுகளில் அறநிலையத் துறைக்கு ரூ.1,190 கோடி நிதி: 4,332 கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தியதாக அரசு பெருமிதம்

**சென்னை, பிப்.24:** வரலாற்றில் இல்லாத அளவுக்கு கடந்த 5 ஆண்டு காலத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்கு ரூ.1,190 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.




இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 2021 மே 7-ம் தேதி தமிழக முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்றது தொடங்கி 2026 பிப்.22 (நேற்று) வரை, 20 முதல் 400 ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடைபெறாத 4,332 கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது.

மொத்தம் 12,931 கோயில்களில் ரூ.8,101 கோடி மதிப்பீட்டில் 29,479 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதில் ரூ.4,346 கோடி மதிப்பிலான 16,756 பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும், நன்கொடையாளர் நிதி மூலம் ரூ.2,001 கோடி மதிப்பீட்டில் 12,220 பணிகள் நடந்து வருகின்றன.

அதேபோல, 1,055 கோயில்களுக்குச் சொந்தமான ரூ.8,436 கோடி மதிப்பிலான 8,107 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள கோயில்களுக்கான திருப்பணி நிதியுதவி ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டு, 5,000 கோயில்களுக்கு ரூ.106 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

1,000 ஆண்டுகள் பழமையான கோயில்களை புனரமைத்து பாதுகாக்கும் சிறப்பு திட்டத்தின்கீழ், அரசு நிதி ரூ.425 கோடி, கோயில் நிதி, நன்கொடையாளர் நிதி, பொதுநல நிதி உட்பட மொத்தம் ரூ.560 கோடி மதிப்பீட்டில் 352 கோயில்கள் திருப்பணிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் 88 கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில் உள்ளிட்ட 10 முக்கிய கோயில்களில் ரூ.1,770 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மற்றும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள் பெருந்திட்ட வரைவின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

21 கோயில்களில் பயன்பாடு இல்லாத தங்க நகைகள் உள்ளிட்ட வற்றை மத்திய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி 1,074 கிலோ 123 கிராம் சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி, வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கோயில்களுக்கு ஆண்டுதோறும் ரூ.17.81 கோடி வருமானம் கிடைக்கிறது.

கோயில்கள் சார்பில் ரூ.70 ஆயிரம் மதிப்புள்ள சீர் வரிசைகளுடன் 2,800 இலவச திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒருகால பூஜை திட்டத்தில் உள்ள 19,000 கோயில்களுக்கான வைப்பு நிதி ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டு, இதற்காக மட்டும் ரூ.335 கோடி அரசு நிதி வழங்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில், முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான 5 ஆண்டுகால ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறைக்கு, வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ரூ.1,189.83 கோடி அரசு நிதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

**சென்னை, பிப்.24:** தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இருநாள்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை மையம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டசெய்திக்குறிப்பு: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை காலை ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுவடைந்து அதே பகுதிகளில் நிலவுகிறது.

இது மேலும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மேற்கு-வடமேற்கு திசையிலும் பிறகு வடகிழக்கு திசையிலும் நகரக்கூடும்.

இதனிடையே தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன்காரணமாக திங்கள்கிழமை (பிப்.23) செவ்வாய்க்கிழமை (பிப்.24) ஆகிய இருநாள்கள் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வட வானிலை நிலவக்கூடும்.


பிப்.25 ஆம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். பிப்.26 ஆம் தேதி

தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வட தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வட வானிலை நிலவக்கூடும்.

தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு மில்லி மீட்டரில் நம்பியாறு அணை (திருநெல்வேலி), கழுகுமலை (தூத்துக்குடி), பெருஞ்சாணி அணை (கன்னியாகுமரி) தலா 50 மிமீ, புத்தன் அணை (கன்னியாகுமரி) 40மிமீ, சிற்றாறு (கன்னியாகுமரி), திருநெல்வேலி தலா 30மி.மீ, மழை பதிவாகியுள்ளது. சென்னை மற்றும் புகா பகுதிகளில் திங்கள்கிழமை (பிப்.23) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆவடி பகுதியில் 11 மின் திருட்டுகள் கண்டுபிடிப்பு: ரூ.8.78 லட்சம் அபராதம் விதிப்பு

**சென்னை, பிப்.24:** ஆவடி பகுதியில் அதிகாரிகள் நடத்திய ஆய்வில் 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு, நுகர்வோருக்கு ரூ.8.78 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.



இதுகுறித்து மின் வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் சென்னை மையம், வடக்கு, தெற்கு, மேற்கு, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் அமலாக்க அதிகாரிகள் கடந்த 11-ம் தேதி ஆவடி பகுதியில் கூட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து, மின் நுகர்வோருக்கு ரூ.8,77,593 அபராதம் விதிக்கப்பட்டது.

புகார் தெரிவிக்கலாம்:

மேலும், சம்பந்தப்பட்ட நுகர்வோர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்றவியல் நடவடிக்கையை தவிர்க்க முன்வந்து அதற்குரிய சமரசத் தொகையாக ரூ.36 ஆயிரம் செலுத்தியதால், அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

மின் திருட்டு தொடர்பான தகவல்களை சென்னை அமலாக்க செயற்பொறியாளரிடம் கைபேசி 94458 57591 என்ற எண்ணில் தெரிவிக்கலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# அருணாசலேஸ்வரர் கோயிலில் திரளான பக்தர்கள் தரிசனம்!

**திருவண்ணாமலை, பிப்.24:** திருவண்ணாமலை அருணாசலேஸ்வரா் கோயிலில் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை திரளான பக்தா்கள் சுவாமி தரிசனம் செய்தனா்.

அதிகாலை 4 மணிளவில் கோயில் நடை திறக்கப்பட்டு அருணாசலேஸ்வரா், உண்ணாமுலையம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றன. இதைத் தொடா்ந்து பக்தா்கள் சுவாமி தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டனா்.

வாரவிடுமுறை என்பதால் இரவு முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், ஆந்திரம், கா்நாடகம், தெலங்கானா என வெளி மாநிலங்களில் இருந்தும் அருணாசலேஸ்வரா் கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய பக்தா்கள் வந்த வண்ணம் இருந்தனா். காலை முதலே பக்தா்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனா்.

ராஜகோபுரம் வழியாக இலவச தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்ட பக்தா்கள் நீண்ட வரிசையில் 2 மணி நேரம் வரை காத்திருந்து தரிசனம் செய்தனா்.

50 ரூபாய் கட்டணத்தில் அம்மணி அம்மன் கோபுரம் வழியாக அனுமதிக்கப்பட்ட பக்தா்கள் தரிசனம் செய்ய ஒரு மணி நேரம் ஆனது. கோயில் நிா்வாகம் சாா்பில் பக்தா்களுக்கு குடிநீா், நீா்மோா் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுவாமி தரிசனம் செய்துவிட்டு திருமஞ்சனம் கோபுரம் வழியாக வெளியே வந்த பக்தா்கள் 14 கி.மீ. தொலைவு கிரிவலப் பாதையை வலம் வந்து அங்குள்ள அஷ்டலிங்க சந்நிதிகளில் வழிபட்டனா்.

# சென்னை புறநகர் ரயில்கள் ரத்து! ரயில் நிலையங்களில் அசாதாரண சூழல்!



**சென்னை, பிப்.24:** சென்னை எழும்பூர் ரயில் நிலையப் பணிகள் காரணமாக புறநகர் ரயில் சேவைகளை தெற்கு ரயில்வே குறைத்துள்ள நிலையில், ரயில் நிலையங்களில் அசாதாரண சூழல் நிலவுகிறது.

எழும்பூா் ரயில் நிலையத்தில் நடைபெற்றுவரும் மறுசீரமைப்பு பணிகள் ஏப்ரல் 5 வரை 45 நாள்களுக்கு திட்டமிடப்பட்டு தொடங்கப்பட்டுள்ளது.

இதனால், சென்னை கடற்கரை - செங்கல்பட்டு பிரிவில் புறநகர் ரயில் சேவைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டும், சில சேவைகள் மாற்றி அமைக்கப்பட்டும் உள்ளன. சென்னை புறநகர்ப் பகுதிகளில் இருந்து நாள்தோறும் லட்சக்கணக்கானோர் பணிக்குச் சென்று திரும்புவதற்கு புறநகர் ரயில் சேவையையே நம்பியுள்ளனர்.

இத்தகைய சூழலில், காலை மற்றும் மாலை நெரிசல்மிகு நேரங்களிலும் புறநகர் ரயில் சேவைகளை தெற்கு ரயில்வே குறைத்திருப்பதற்கு பயணிகள் மத்தியில் கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை மாலைமுதல் சென்னையில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களிலும் கூட்டநெரிசல் ஏற்பட்டது. பல பயணிகள் ரயில்கள் நகரும்போது கீழே விழும் காட்சிகள் இணையத்தில் வைரலாகி பதற்றத்தை ஏற்படுத்தியது.

இதையடுத்து திங்கள்கிழமை நெரிசல்மிகு நேரத்தில் கூடுதல் ரயில்கள் இயக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வெள்ளிக்கிழமை போன்ற நிலையே தொடர்ந்துள்ளது.

தாம்பரம், கோடம்பாக்கம், கிண்டி போன்ற பல்வேறு முக்கிய ரயில் நிலையங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் ரயில்களில் முந்தியடித்து ஏறுவதால் பதற்றமான சூழல் நிலவுகிறது.

சென்னை மாநகரப் போக்குவரத்து கழகம் சார்பில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டாலும், போதுமானதாக இல்லை என்று பயணிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

மேலும், கூட்டநெரிசல் காரணமாக அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கு முன்னதாக போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று ரயில்வேவுக்கு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஹனுமந்த வாகனம்



மதுரை ஸ்ரீ கூடலழகர் தெப்ப திருவிழா மூன்றாம் திருநாள் இரவு ஹனுமந்த வாகனம் - ராமர் திருக்கோலம்

## இளைஞர் பாசறை சார்பில் கபடி போட்டி





விழுப்புரம் மாவட்டம் அதிமுக இளைஞர் பாசறை மற்றும் அத்தியூர் ஸ்பார்ட்டின் வாரியர் இணைந்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 78 வது பிறந்தாளை முன்னிட்டு அத்தியூர் எம்.ஜி.ஆர் திடலில் கபடி போட்டி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கபடி போட்டியில் வெற்று பெற்றவர்களுக்கு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாவட்ட இளைஞர் பாசறை செயலாளர் ஜெயபிரகாஷ் முதல் பரிசை வழங்கினார். செஞ்சி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சோழன் இரண்டாம் பரிசை வழங்கினார் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் செஞ்சி பிரித்தீவ்ராஜ் மூன்றாம் பரிசை வழங்கினார் மாவட்ட இளைஞர் பாசறை இணைச்செயலாளர் வழக்கறிஞர் சூர்யபிரகாஷ் விழா நன்றி உரையாற்றினார்.

## வரலாற்றை கொண்ட கொள்ளிடம் புலீஸ்வரி அம்மன் கோவில் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தது



**சீர்காழி, பிப்.24:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே கொள்ளிடத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான புலீஸ்வரி அம்மன் கோவில் அமைந்துள்ளது. இத்தலம் 108 சக்தி தலங்களில் 50-வது தலமாக விளங்குகிறது.

உலகிலேயே 'புலீஸ்வரி அம்மன்' என்ற பெயரில் அமைந்துள்ள ஒரே தலம் இதுதான் என்பது விரிவான ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டு உள்ளது. இத்தலம் சங்க கால இலக்கியங்களான அகநானூறு மற்றும் சிலப்பதிகாரத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

இந்திய தொல்பொருள் ஆய்வு துறையின் ஆவணங்களின் படி, இக்கோவில் 150 ஆண்டு கால ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றை கொண்டுள்ளது. கொள்ளிடம் ஆன்மிக பற்றாளர் பிரபு என்பவரின் முயற்சியால், இக்கோவிலின் சிறப்புகள் உலக சாதனை அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டது.

இவற்றை சரிபார்த்த ஜாக்கி புக் ஆப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் நிறுவனம் இக்கோவில் தனித்துவமான, உலகளாவிய பெயரிடல் மற்றும் பண்டைய இலக்கிய மரபு என்ற பிரிவின்கீழ் இதற்கான உலக சாதனை அங்கீகாரத்தை வழங்கி சிறப்பித்து உள்ளது. இதனை அறிந்த பக்தர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மஹா சம்ப்ரோக்ஷணம்



வேணுகோபால சுவாமி கோவில் லிங்கி செட்டி தெரு மஹா சம்ப்ரோக்ஷணம்.

## திருச்சி புத்தகத் திருவிழா சிறப்பு நிகழ்வு:



**திருச்சி, பிப்.24:** *CSI செயிண்ட் ஜான் வெஸ்ட்டிரி மேல்நிலைப்பள்ளி புத்தகத் திருவிழா நிறைவு நாளான நேற்று முன்தினம் (22.02.26) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் திரு. ஆர்.பாலகிருஷ்ணன் IAS " பெயரும் பீடும் எழுதி" என்ற தலைப்பிலும் சென்னை போட்டித் தேர்வுகள் பயிற்சி மைய முதல்வர் முனைவர் தே.சங்கர சரவணன் " இதைக்கண் முறிந்தார் பலர்" என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர்.*

*முன்னதாக நிகழ்ச்சியில் மூத்த பத்திரிகையாளர்கள் திரு.சையத் முத்தாஹர் (தி ஹிந்து) திரு. ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு (கல்கி, ராணி உள்ளிட்ட வார இதழ்கள்) திரு. ஷேக் அப்துல்லா ( KSR TRUST) மூளை நரம்பியல் மருத்துவர் M.A. அலீம் SRV மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் திரு. துளசிதாசன் உள்ளிட்டோர் அவர்களின் சேவைகளுக்காக பாராட்டுப் பெற்றனர்..*

## இரு கவிதை நூல்கள் வெளியீடு :



CSI செயிண்ட் ஜான் வெஸ்டிரி புத்தகத் திருவிழா நிறைவு நாளான நேற்று முன்தினம் (22.02.26) 1. தாடி முளைத்த நெடும்பனை - ஆநிறை செல்வன் 2. தனிமை நேரத்து தூண்டில்காரன் - ஆங்கரை பைரவி கவிதை நூல்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் திரு.ஆர். பாலகிருஷ்ணன் IAS செங்காந்தள் சோழன் பதிப்பகம் அரங்கில் வெளியிட , இவற்றின் முதல் பிரதிகளை கவிஞர் கோ.கலியமூர்த்தி திரு.சௌமா ராஜரத்தினம் இருவரும் பெற்றுக் கொண்டனர்.

# கொடைக்கானல்: தொழிலதிபரை கொன்ற கும்பல் தலைமறைவு

**திண்டுக்கல், பிப்.24:** *கொடைக்கானலில் தொழிலதிபரும், நடிகையின் தந்தையுமான சூர்ய நாராயணன் கொலை செய்யப்பட்டது தொடர்பாக போலீஸார் விசாரித்து வருகின்றனர்.*

*தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தைச் சேர்ந்தவர் தொழிலதிபர் சூர்ய நாராயணன் (73). இவருக்குச் சொந்தமான தங்கும் விடுதி, கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோயில் அருகே உள்ளது. இவர், மாயாவி திரைப்படத்தில் மாற்றுத் திறனாளி பெண்ணாக நடித்த விஷ்ணுபிரியாவின் தந்தை யாவார்.*

*சூர்ய நாராயணின் விடுதியில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு கோவையைச் சேர்ந்த 5 இளைஞர்கள் அறை எடுத்து தங்கினர். நேற்று முன்தினம் மாலை விடுதியில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணி முடிந்து வீட்டுக்குச் சென்றுவிட்டனர்.*

*சூர்ய நாராயணன் மற்றும் அவரது உதவிக்கு ஆறுமுகம், முரளி ஆகிய 2 பணியாளர்கள் மட்டுமே விடுதியில் இருந்துள்ளனர். அப்போது, விடுதியில் தங்கியிருந்த 5 இளைஞர்களும், பணியாளர்களை கயிற்றால் கட்டிப்போட்டனர்.*

*பின்னர், சூர்ய நாராயணனையும் நாற்காலியில் கயிற்றால் கட்டிப் போட்டுவிட்டு, அவரது வாய், மூக்கை பிளாஸ்டிக் டேப்பால் ஒட்டி மூச்சு விட முடியாதபடி செய்து, கொலை செய்தனர்.*

*பின்னர், அந்த விடுதியில் இருந்த முக்கிய ஆவணங்கள் மற்றும் சிசிடிவி ஹார்ட் டிஸ்க், செல்போன் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு 5 பேரும்தப்பினர். இந்நிலையில், கயிற்றால் கட்டப்பட்டிருந்த ஒரு பணியாளர் அதிலிருந்து விடுபட்டு வெளியே வந்து அக்கம் பக்கத்தினருக்குத் தகவல் தெரிவித்தார்.*

*தகவலறிந்து வந்த கொடைக்கானல் போலீஸார் சூர்ய நாராயணனின் உடலை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.*

*முன்விரோதம் காரணமா?*

*மேலும் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து, கொலையாளிகளைத் தேடி வருகின்றனர். ஏற்கெனவே, மகள் காதல் விவகாரத்தில் வாகன ஓட்டுநரை கூலிப்படையை ஏவி சூர்ய நாராயணன் கொலை செய்ததாக வழக்கு நிலுவையில் உள்ளது.*

*இதனால் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக சூர்ய நாராயணன் கொலை செய்யப்பட்டாரா அல்லது தொழில் போட்டி காரணமா என்று போலீஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.*





## துணை முதலமைச்சர் பதவி வேண்டும் என்று கேட்கிறார்... பிரேமலதாவை விமர்சித்த இ.பி.எஸ்.



**சென்னை, பிப்.24:** மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம் எழுச்சிப்பயணத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று பொன்னேரி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள திறந்தவெளி மைதானத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் எழுச்சியுரை மேற்கொண்டார்.

அப்போது பேசிய இபிஎஸ், "இன்னும் இரண்டு மாதம் தான்... ஏப்ரலில் தேர்தல் வரும். இந்த தேர்தலில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மாபெரும் வெற்றியை தேடித் தரவேண்டும். நம் கூட்டணி வலிமையானது அதிமுக தான் தலைமை. வெற்றி பெற்று அதிமுக தான் ஆட்சி அமைக்கும், அதிமுக தலைவர் தான் முதல்வர்.

திமுக கூட்டணி அப்படியா இருக்கிறது? காங்கிரஸ் பங்கு கேட்கிறது. எப்போதும் உங்களுக்கு அடிமையாக இருக்கிறோம் என்று ஆட்சி அதிகாரத்தில் பங்கு, கூடுதல் இடம் என்று பிரச்னை. தேர்தல் வரை இந்தக் கூட்டணி நிலைக்குமா என்பதே கேள்விக்குறி ஆகிவிட்டது.

இரண்டு மாதம் முன்பு ஸ்டாலின் என்ன பேசினார்..? இபிஎஸ் கடையை விரித்து வைத்திருக்கிறார், யாரும் வரவில்லை என்றார். பலமான கூட்டணி அமைந்துவிட்டது. இது, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து மக்கள் விரோத திமுகவை அகற்ற வேண்டும் என்பதற்கு உருவான கூட்டணி. உங்கள் கூட்டணி அப்படியில்லை சுயநலம் நிறைந்த கூட்டணி. அதனால் தான் திமுகவின் நிலை தெரிந்து காங்கிரஸ் பங்கு கேட்கிறது, விசிக பட்டும் படாமலும், பங்கு இருந்தால் பரவாயில்லை என்று கேட்கிறார்கள்.

இப்போது புதிதாக ஒரு கட்சி சேர்ந்திருக்கிறது. அந்தம்மா மாநாடு நடத்தியபோது, அவர்களுக்கு துணை முதல்வர் பதவி வேண்டும் என்று கேட்கிறது. அப்படிப்பட்ட கட்சிகள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து கூட்டணி வைத்துள்ளன.

நம் கூட்டணி ஒரே நிலைப்பாடு அதிமுக ஆட்சிக்கு வரவேண்டும், மக்கள் விரோத திமுகவுக்கு நிரந்தர விடுதலை கொடுக்க வேண்டும். இதுதான் நம் கூட்டணிக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம். லேட்டாக கூட்டணி அமைத்தாலும் லேட்டஸ்டா அமைத்த கூட்டணி" என்று தெரிவித்தார்.

## தீபத்தூணில் தீபமேற்ற உறுதி- அண்ணாமலை




**சென்னை, பிப்.24:** பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை எக்ஸ் தள பக்கத்தில் வீடியோ ஒன்றை பகிர்ந்து கூறியிருப்பதாவது:-

சக்திவேல் ஏந்திய குமரனுக்கு உகந்த திதியான சஷ்டியும், கந்தனுக்கு உகந்த நட்சத்திரமான கார்த்திகையும் இணைந்துள்ள இன்றைய நாளில், திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றவேண்டும் என்ற உறுதியை ஏற்று "கந்த சஷ்டி கவசம்" பாடி முருகனை போற்றுவோம்.

அனைவரின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் கந்த சஷ்டி கவசம் பாடி, முருகப்பெருமானின் பேரருள் உலக மக்கள் அனைவருக்கும் கிடைத்திட மனதார பிரார்த்திப்போம் என்று கூறியுள்ளார்.

முன்னதாக, திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபமேற்றும் போராட்டத்தின் அடுத்தக்கட்டமாக வருகிற 2-ந்தேதி கிரிவலம் செல்ல பாஜக முடிவு செய்துள்ளது. சதுர்த்தியும், கிருத்திகையும் இணைந்து வரும் இன்று முருகப் பெருமானுக்கு 7 தீபங்கள் ஏற்றுமாறு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வேண்டுகோள் விடுத்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனிச்சின்னத்தில் போட்டி: தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக்குப் பிறகு மதிமுக அறிவிப்பு



**சென்னை, பிப்.24:** தொகுதிப் பங்கீடு தொடர்பாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் டி.ஆர். பாலு தலைமையிலான திமுக குழுவுடன் மதிமுக குழுவினர் இன்று பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த மதிமுக குழுவினர், திமுகவிடம் மாநிலங்களவை சீட் கேட்டுள்ளோம். கடந்த முறையைவிட கூடுதல் தொகுதி கேட்டுள்ளோம். தொகுதிகளை குறைத்துக்கொள்ளுமாறு திமுக கேட்கவில்லை.

பேரவைத் தேர்தலில் தனி சின்னத்தில்தான் மதிமுக போட்டியிடும். எத்தனை தொகுதிகள் என்பதை பின்னர் தெரிவிக்கிறோம். இவ்வாறு குறிப்பிட்டனர். கடந்த பேரவைத் தேர்தலில் 6 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் மதிமுக போட்டியிட்டது.

ஆனால் வரும் தேர்தலில் தனிச் சின்னத்தில் போட்டியிடப்போவதாக மதிமுக தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தையை திமுக ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

வழக்கம்போல இந்த முறையும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியுடன் முதலில் பேச்சு நடத்தப்பட்டது. தொடர்ந்து, திங்கள்கிழமை மனிதநேய மக்கள் கட்சி, மதிமுகவுடன் டி.ஆர்.பாலு தலைமையிலான திமுக குழு திங்கள்கிழமை நடத்தியுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com